REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 2¼
ஆறுமாத சந்தா	...	ரூ. 1¼

தனிப்பிரதி முக்காலணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ.	20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ.	12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ.	8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா	8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-26 | கும்பகோணம் விக்ரம-ஹு தை-மீ 17உ 1941-ஹு ஜனவரி-மீ 30உ | லூ-4

வாரக் குறிப்புகள்

ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா

வாய் கூசவில்லையா? தூத்துக்குடியில் ஓர் விநாயக ஆலயத்தை இடித்து விடும்படியும் வேறிடத்தில் வேண்டுமானால் கட்டிக் கொள்ளும் படியும் கலெக்டர் உத்திரவிட்டார்!! பக்தர்களும் பல ஸபைகளும் அதை கண்டித்து மநு செய்திருக்கிறார்கள்! பொறுத்துப்பார்ப்போம்]

பொருத்தமற்ற செயல்!! மைசூர் ஸமஸ் [illegible] அமர்த்த அரசாங்கம் கருதுகிறதாம். இந்திய ஸமஸ்தானங்களுக்கு இந்தியரை நியமிப்பது பொருத்தமுள்ளது. வைதிக பற்றுள்ள அரசருக்கு வைதிகாபிமானியை நியமிப்பதே உசிதம்!!

முறையற்ற செயல்!! வர்ணாச்ரமாதி தர்மங்களைக்கைவிட்டோ மாற்றியோ பாரத நாட்டின்பெருமையைக்குறைத்துப்பாழாக்கியதுபோல், நல்ல கல்வியில்லாவிடினும் தற்கால கல்வியைக்கூட கெடுக்கும்படியான ஆவேசத்தை மாணவருக்கு உண்டுபண்ணியது மிக ஆபத்தானது! பல மாணவர்கள் கைதியாகும்படி திரே திரே சேருவது நல்லதல்ல!!

பெற்றோருக்கன்றோ நஷ்ட கஷ்டம்!! விஷயமறியாமல் சில பெண் மக்கள் மாலைக்கும், பத்ரிகையில் பெயர் வருவதற்கும்; சிலர் காங்க்ரஸ் அரசாங்கம் வந்தால் உத்தியோகத்திற்கும் ஆசைப்பட்டு ஸத்யாக்ரகம் செய்வது போல், காலேஜ் மாத்ரமல்ல சிறிய கலாசாலை மாணவர்களும் இச்சமயம் அரசியலில் தலையிட்டு சிறை செல்வது தவறு. இரண்டாண்டு சம்பளம் புத்தகம் உடை சாப்பாடு செலவு செய்து பரீக்ஷைக்குப் போகாதபடி நேர்ந்தால் ஏழை பெற்றோர் கதி என்ன?

ஐநூறு கிறிஸ்தவர் இந்தியராயினர்!! ஹிந்துமாஸபையினர் திருவாங்கூரில் இந்தத் தொண்டு செய்தனர். கிருஸ்தவ ராஜ்யமாக மாறிவிடாமல் இந்துக்கள் அதிகமாக அங்கிருப்பது சந்தோஷகரமாயினும் சாஸ்த்ரம் சிஷ்டாசாரம் சுத்த ஜாதி இவைகளைக்கவனிக்கும் போது இதை நாம் ஆதரிப்பதற்கில்லை!!

பத்திரிகை கூடிற்று! நன்றி!! நமது ஆர்ய தர்மம் 8ம் பக்கத்தில் சென்ற வாரம் வெளியூர் செய்திகள் என்ற தலைப்பின் கீழ் முக்யாம்சம் விடாமல் விஷயம் வெளிவந்தது மிக ரஸமானது!! பத்ரிகை உலகம் கொண் [illegible] த்தக்கது! ஒரு வாரத்திய ராய்ட்டர், தேசீயம் முதலியவைகளும் சு[illegible]க இப்படி வெளியாயின் இதர பத்ரிகைகளைத் தேடாமல் இதை எல்லோரும் ஆதரிப்பர்! ஆனால் நிர்வாஹருக்கு ச்ரமம் அதிகம்! சொல்வது யாவர்க்குமெளிது! ஆனால்——?

ஓர் ஸந்தேஹம்!! ஸூத ஸம்ஹிதையை பஞ்சாஹமாக ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள் பல முறை நடத்தியதாகத்தெரிகிறது. அதற்காக பிரமாண நூல் எது? இல்லையேல் அவர்கள் எப்படி நடத்தி வந்தார்கள் என்பதை அநுபவிகள் எழுதினால் நலம்.

ஸ்ரீ மீனாக்ஷி ஜநனம்!! ஸ்ரீமடத்தில் ஸோமவாரந்தோறும் நடக்கும் ஸ்ரீ ஹாலாஸ்ய மஹாத்ம்யத்தில் இந்த திங்கள் ஷை விஷயம் நடந்தது. பக்தர்கள் பரிபூர்ணமான மீனாக்ஷி பக்தியைக்காட்டினர்.

முக்ராதிகாரிகளின் பிரசாரம்.

கும்பகோணம்:—மஹாமகக்குளத் தெரு ஸ்ரீ காசி விச்வநாதஸ்வாமி ஸந்நிதியில் சென்ற ஏகாதசி தினம் ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்யம் என்ற விஷயம் படிக்கப்பட்டது. ஸ்ரீமஹாபாரத பிரவசனம் இங்கு தொடர்ச்சியாய் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

என். எஸ். ராஜப்பய்யர், முத்ராதிகாரி.

காமாக்ஷி ஜோஸ்யர் தெரு வகைரா பிரிவிலுள்ள மஹா ஜனங்கள் ஸ்ரீமடத்தில் சென்ற வியாழக்கிழமை ஏகாதசியன்று கூடியிருந்த ஸமயம் ராஜா பாடசாலை உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ சாமா சாஸ்திரிகள் குசேலோபாக்யானம் உபந்யஸித்தார்கள்.

ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி
முத்ராதிகாரி.

* * *

மேட்டுந்தெருவில்— 24—1—41, 4-மணிக்கு ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் ஸ்ரீகச்சபேச்ர சாஸ்திரிகளால் பஞ்சாக்ஷர மஹிமை உபந்நியஸிக்கப்பட்டது.

டி. ஜே. கிருஷ்ணமூர்த்தி

* * *

ராதாகல்யாணம்— குடந்தை மேட்டுத் தெரு மேல்புரத்திலுள்ள தடாக பிருந்தாவனத்தில் ராதாகல்யாணவைபவம் சிறப்பாக நடந்தேறியது. 400 பேருக்கு பிராம்மண ஸந்தர்ப்பணம் நடந்தது. விக்ரபாண்டி ஸ்ரீ கோபால சாஸ்திரிகளின் பிரஸங்கமும் ஆஞ்சநேய உத்ஸவமும் நடந்தது.

* * *

கோவேரி ராஜபுரத்தில்— 23—1—41 ஏதாதசி தினம் கொடுமுடி ஸ்ரீராஜகோபால சாஸ்திரிகளால் ஏதாதசி மஹிமையைப் பற்றியும், உபவாஸமிருப்பதின் பிரயோஜனத்தைப்பற்றியும் விரிவாக உபந்யாஸிக்கப்பட்டது.

ஸ்ரீ ஆனந்தாச்ரம ஸம்ஸ்கிருத பாடசாலை மேலக்காவேரி ஸஹஸ்ரநாமபாராயணம்

ஷை பாராயண போட்டிப் பரிக்ஷை 1940 டிஸம்பர் 4வதுவாரத்தில் நடைபெற இருந்தது. பெரும்பாலோர் மாணவர்களின் சௌகர்யத்தை முன்னிட்டு ஜனவரிமீ 4வதுவாரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. நகரிலுள்ள பல பாடசாலையின் கண்ணுள்ள மாணவர்கள் கலந்துகொள்ள முன்வந்திருக்கிறார்கள். கமிட்டியார் போட்டிப் பரிக்ஷையில் கலந்துகொண்ட எல்லா மாணவர்களுக்கும், ஏதாவது பரிசளிக்க முயன்று வருகின்றனர்.

மாவையும் கண்டபாலையும் போட்டி குழந்தையின் குடலைக்கெடுக்காதீர். தாய்ப் பால்தான் குழந்தைக்குச் சரியான உணவு.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலை விசேஷமாய்வளர்க்கும் திவ்ய ரஸாயனம்
விலை ரூ. 2—4—0
(Packing & Postge extra)

Address:—
"ஆத்ரேய"
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ், தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.
ப்ரோப்ரைடர்: V. B. நடராஜசாஸ்திரீ
ஆயுர்வேதாசார்யா

சாந்த ரஸம்

மஹாமஹோபாத்யாய, ராயம்பேட்டை,
(கிருஷ்ணமாசாரியர்)
(முன் தொடர்ச்சி)

வேறு சிலர் இந்த நிர்வேதத்தை ஸ்த்தாயி பாவமாக ஒப்புக்கொள்ள மறுக்கிறுர்கள் இதற்கு அவர்கள் கூறும் காரணங்களாவன:—

மற்ற ரஸங்களின் ஸ்த்தாயி பாவங்களுள் ஒன்று கூட, வ்யபிசாரி பாவங்கள் முப்பத்து மூன்றில் சேர்ந்ததாகக் காணப்படவில்லை. ஆகையால் முப்பத்து மூன்று வ்யபிசாரி பாவங்களுள் ஒன்ருன நிர்வேதம் ஒரு ரஸத்துக்கு ஸ்த்தாயிபாவமாகவியலாது "அமங்களமான நிர்வேதத்தை இதன் முதலில் கூறியிருப்பதால், இது ஸ்த்தாயி பாவ: மாகவும் கொள்ளத்தக்கது" என்று சொல்வதும் ஸரியல்ல. இது மங்களம், இது அமங்களம் என்கிற விசாரம், கிரந்த ஆரம்பத்தில் இது இருந்தாலல்லவோ ஏற்படக்கூடியது. இது காணப்படுவது ஆருமத்தியாயத்திலல்லவா! மேலும், நிர்வேதம் எப்படி அமங்களம்? உங்கள் கொள்கைப்படி இதை ஸ்த்தாயி பாவமாகவுடைய சாந்த ரஸத்துக்குப்பலனுன மோக்ஷம் அசுபமா? சுபமன்ரே மோக்ஷம்? இம்மோக்ஷத்தை உண்டாக்கும் வழியான நிர்வேதத்தை அமங்களம் என்றுசொல்வது பொருந்தாது மேலும், நீங்கள், தத்வஜ்ஞானத்தாலுண்டாகும் நிர்வேதம் போஷிக்கப்பெற்று சாந்த ரஸமாகி மோக்ஷத்தைக்கொடுக்கின்றது என்று சொல்லுகிறீர்கள். "தத்வஜ்ஞாநாத் மோக்ஷ:" என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஸித்தாந்தம். எனவே, தத்வஜ்ஞாநத்திலிருந்து நிர்வேதம் பிறந்து, பிறகு மோக்ஷம் கிடைப்பதாகக் கூறுவது, கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப்பிடிப்பதற்கொப்பாகவே யிருக்கிறது. மேலும், நிர்வேதம் பிறந்து பிறகு தத்வஜ்ஞானம் உண்டாவதையே நாம் காண்கிறேம். ஆகையால், தத்வஜ்ஞாநத்திலிருந்து நிர்வேதம் பிறப்பதாகக்கூறுவது விபரீதமே.

இந்த விஷயத்தில் சிங்கபூபாலன் இவ்வாறு எழுதுகிறுன்— "நிர்வேதம் ஸ்த்தாயி பாவமாக முடியாது. ஒரு பாவம், அல்லது சித்தவ்ருத்தி (மனப்போக்கு) ஸ்த்தாயிபாவமாக வேண்டுமென்றுல், அந்தப் பாவம், பாவுகர்களின் (ரஸானுபவம் செய்பவர்) உள்ளத்தில் உறைந்து கிடக்கும் அதன் ஸம்ஸ்காரம் அல்லது வாஸனை அவ்வப்பொழுது நேரிடும் காரணங்களால் எழுச்சி பெற, அதன் மூலம் அடிக்கடி புதுமை பெற்று விளங்கவேண்டும். நிர்வேதமென்பதோ, தத்வஜ்ஞாநம் முதலியவற்ருல் ஏற்படுகிற தன்னிகழ்ச்சி அல்லது எல்லாம் நிஷ்ப்பலம் என்ற புத்தி எனக் கூறப்படுகிறது. ஆகவே இந்த நிர்வேத வாஸனையுள்ள மனத்தில், பயனற்றவை என்று நினைக்கப்படும் விபாவாதிகளால் (ஸித்தாயிபாவகாரணாதிகள்) எவ்விதம் நிர்வேதம் உண்டாகக்கூடும்? இது உண்டாவதற்கே வழி இல்லாதிருக்கையில் இதனை ஸ்த்தாயிபாவமாகக்கொள்வது எப்படி? இவ்வாறிருக்க இதை ஸ்த்தாயிபாவமாகக் கொண்டுச் சில ரஸிகர்கள் சாந்தரஸாநுபவம் பண்ண நினைப்பது, சித்திரத்தில் எழுதிய வாழைப்பழத்தைக் கொத்தித் தின்ன நினைக்கும் அரண்மனைக்கிளிகளின் விவேகத்துக்கு ஒப்பானதே"—

இதில் தத்வஜ்ஞாநம் என்பது மோக்ஷஸாதனமான உண்மை தத்வஜ்ஞாநம் என்று நினைத்துச் சிலர் கூறிய தூஷணம் நிலைபெருது. இங்கு நிர்வேதத்துக்குக் காரணமாகக்கூறிய தத்வஜ்ஞாநமென்பது, பொதுவாக நித்யாநித்ய வஸ்து விவேகம். அதாவது— இது நித்ய வஸ்து, இது அநித்ய வஸ்து என்று பொதுவாகப் பகுத்தறிவு. இதனைத்தான் அத்வைதிகளும் ஸாதன சதுஷ்டயத்தில் (ப்ரஹ்ம விசாரத்துக்கு வேண்டிய நான்கு ஸாதனங்கள்) ஒன்ருக கூறுகிறுர்கள். "நித்யாநித்ய வஸ்து விசார ஜன்மா விஷயவிராகாக்யோ நிர்வேத:" என்று ரஸகங்காதரத்தில் சொல்லப்படுகிறது.

இந்தச் சாந்த ரஸத்துக்கு சமம் (शम) தான் ஸித்தாயிபாவமென்பது பலருடைய கொள்கை. "ஸ்வதொ விஷய வைமுக்கியம் ச (श) ம:" என்று ஸங்கீத ரத்நாகரத்திலும் "ஸர்வ சித்தவ்ருத்தி ப்ரவிலய ரூப: சம:" என்று வேறு கிரந்தங்களிலும் காணப்படுகின்றது. அதாவது ஸ்வயமாகவே மனத்துக்கு எந்த விஷயத்திலும் பற்று நசித்துப்போகுதல் சமம் எனப்படுகிறது. வேறு சிலர் இதனை ஆக்ஷேபிக்கிறுர்கள். நசித்தல் என்பது அபாவம் (இன்மை) பாவங்களோ சித்தவ்ருத்தி ரூபங்கள். அபாவம் சித்தவ்ருத்தியாக மாட்டாது. ஆகையால் சமோ நிரீஹாவஸ்த்தாயாமாத்ம விச்ராமஜம் சுகம் என்று ஸாஹித்ய தர்பணத்தில் காட்டியிருப்பதைத் தான் சமத்தின் லக்ஷணமாக கொள்ள வேண்டும். அதாவது ஆசையற்ற நிலையில் மனத்துக்கு ஓய்வினுலுண்டாகும் சுகம் சமமெனப்படுகிறது. ஆசையற்ற நிலையில் ஜீவாத்மாவுக்கு உண்டாகும் ஸ்வரூபாநந்தம் என்று சிலரும் ஆசையற்ற நிலையில் ஜீவாத்மா பரமாத்மாவிடமிருப்பதால் உண்டாகும் ஆநந்தமென்று சி[illegible] இதனை [illegible]வித்திருக்கிறுர்கள். "சாந்தச்ச த்ருஷ்ணா, க்ஷயஸுகஸ்ய ய: பரிபோஷ:, தல்லக்ஷணோ ரஸ: ப்ரதீயத ஏவ" என்று எழுதிவிட்டு, ஆநந்தவர்த்தனர் "யச்ச காமஸுகம் லோகேயச்ச திவ்யம் மஹத்சுகம். த்ருஷ்ணாக்ஷயசுகஸ்யைதே நார்ஹத: ஷோடசீம்கலாம்" என்று ப்ரமாணமும் காட்டியிருக்கிறுர். இவ்வுலகத்திலுள்ள பெரியசுகமும், ஆசையின்மையாலுண்டாகும் சுகத்தின் பதினுறிலொருபங்குகூட மஹிமை பெரு என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. த்ருஷ்ணாக்ஷய பதத்தை அபிநவ குப்தர், நிர்வேத பரமாய் வ்யாக்யானித் திருப்பதாக ரத்நாபணக்ரந்தம் கூறுகிறது. இப்போது காணும் லோசன க்ரந்தபங்க்தி அவ்வாறில்லை. நிர்வேதம் சமம், த்ருஷ்ணாக்ஷயம் இம்மூன்றும் ஒன்றே என்று குமாரஸ்வாமி கூறுகிறுர்.

ஸுபாஷ் போஸ் மறைவு.

பிரபல தேசாபிமானியான ஸ்ரீமான் சுபாஷ் சந்திர போஸ் சென்ற சில தினங்களாகக் காணப்படாமல் எங்கேயோ மறைந்திருக்கிறுர். எவ்வளவு தேடியும் இருப்பிடம் தெரியவில்லை.

இந்திய ராஜீய நிலைமை காந்திஜி தலைமையில் அதிருப்திகரமாயிருப்பதைப் பற்றிச் சில நாட்களாக இவர் சிந்தித்து வேதனையடைந்துவந்தாராம் சில தினங்களாகவே இவர் வீட்டினருடனும் பேசுவதை விட்டுவிட்டு தனியான அறையில் புலித்தோல் ஆஸனத்தில் அமர்ந்து யோகாப்யாசமும் கீதா பாராயணமும் செய்துவந்தார்.

பாரததேசமானது சன்யாசதர்மத்தின் மூலமாகவே க்ஷேமமடையக்கூடுமென்பதை அடிக்கடி சொல்லிவந்தாராம்

சட்டக்குறிப்புகள்

வியவசாயக்கடன் நிவாரணச்சட்டம்
(Madras Act IV of 1938)
(ஜி. வி. வெங்கடராமய்யர் பி. ஏ. பி. எல் அட்வகேட்)

இச்சட்டம் செல்லுபடியுள்ளது தான் என்றும் அதை இயற்ற சென்னை மாகாண சட்ட சபைக்கு அதிகாரம் உண்டென்றும் பெடரல் கோர்ட்டார் அவர்களால் சமீபத்தில் தீர்மானிக்கப்பட்டது வியவசாயக் கடன்காரர்களும் அவர்களுக்கு கடன்கள் கொடுத்தவர்களும் அந்தச் சட்டப்படிக்கு முறையே உள்ள பாத்தியங்களை பராமர்சிப்பது அவச்யமாகும். அவைகளின் சில அம்சங்களை விசாரிப்போம்.

இச்சட்டத்தைப்பொது கோர்ட்டில் ஏற்படும் தீர்மானங்கள் பரஸ்பரம் விரோதமில்லாமல் இருக்கவேண்டி கனம் ஜஸ்டிஸ் வாட்ஸ்வொர்த், பதஞ்சலி சாஸ்திரிகள் ஆகிய இரண்டு ஜட்ஜ்கள் முன்பாக மாத்திரம் அதுவிஷயமான கேஸ்கள் எல்லாம் தீர்மானத்திற்கு வரும்படி ஹைகோர்ட்டில் ஏற்பாடு செய்திருக்கிறுர்கள். அவர்கள் தீர்மானங்களைப் பொருத்தே அந்தச் சட்டத்தின் கருத்துக்கள் அடியில் காணப்பட்டிருக்கின்றன.

(1) சட்டம் ஏற்படுமுன் கடன் தஸ்தவேஜிப்படிக்கு கொடுபடவேண்டிய வட்டி பணங்களை கடன்காரன் கொடுத்தால் கொடுத்ததுதான். ஷை சட்டப்படிக்குள்ள நோட்டுக்குமேல் கொடுத்திருக்கும் உபரி வட்டிகளை திருப்பிக்கேட்கவாவது, அசலில் உளவடைக்கவாவது பாத்தியமில்லை.

இந்த விஷயத்தைச் சற்று [illegible] பார்ப்போம். A என்பவன் Bக்கு 1930 ஷூ ஜனவரி மீ 1உ மாதம் 1க்கு 100 க்கு 1 வீதம் வட்டி ஏற்பாட்டுடன் ரூ 1000 கடன் கொடுத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தக்கடனுக்காக B என்பவன் 1937 ஷூ ஜனவரி மீ 1உ வரையிலுள்ள வட்டித்தொகைகள் ரூ 840 ஐயும் பல சமயங்களில் கொடுத்து அவைகளை வட்டிக்கென்றே கடன் தஸ்தவேஜியில் வரவு வைத்திருப்பதாகவும் வைத்துக்கொள்ளுவோம். பிந்திய வட்டி கொடுக்காத காரணத்தால் 1940 ஷூத்தில் அந்த தஸ்தவேஜியைப்பொருத்து தாவாசெய்வதானுல் Aக்கு அசல் ரூ. 1000மும் அதற்கு 1–10–1937 முதல் டிக்ரி தேதி வரையில் டிக்கிரிக்குப் பிறகு வசூலாகும் வரையில் கிடைக்கும். கடன்காரன் கடன் தேதி முதல் 100க்கு வருஷம் 1க்கு $6\frac{1}{4}$ வீதம் வட்டி கணக்கிட்டு அதற்குமேல் கொடுத்திருக்கும் உபரி தொகைகளை அசலுக்கு உளவடைத்துக் கொள்ளும்படி சொல்ல பாத்தியமில்லை.

1932ம் ஷூ அக்டோபர் மீ 1 உக்கு பிறகு ஏற்பட்ட கடனுக்கும் அதே மாதிரி தான். ஷை ரூ 1000 A என்பவனுல் 1933 ஷூ ஜனவரி மீ 1உ. கொடுக்கப்பட்டதாக வைத்துக்கொள்ளுவோம். அதற்கு வட்டி ரூ 480ம் 1937 ஷூ ஜனவரி மீ 1உ வரை கொடுத்து வட்டிக்கென்றே கண்டு வரவு வைத்தும் பிந்தி வட்டி கொடுக்காமலும் இருந்ததின் பேரில் 1940 ஷூத்தில் A தாவா செய்தால் அவனுக்கு ஷை ரூ 1000 மும் 22—3—38 முதல் அதற்கு 100 க்கு வருஷம் 1க்கு $6\frac{1}{4}$ வீதம் வட்டியும் டிக்கிரி வரையிலும் கிடையாதுமல்லாமல் டிக்ரிக்குப்பிறகு 100க்கு வருஷம் 1க்கு 6 வீதம் வசூலாகும் வரையில் கிடைக்கும். கடன் தேதி முதல் ஷை சட்டம் 9-வது பிரிவில் கண்டபடி 100க்கு வருஷம் 1க்கு வருஷம்

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்கவும்)

ஸ்ரீமான் ஆர். பி. திலகரின் துராக்ரஹம்

உண்ணாவிரதத்தைப்பற்றி டிரஸ்டிகளின் ஸ்டேட்மெண்ட்

பூனா, கேஸரி மராட்டா பத்திரிகை டிரஸ்டிகள் நமக்கு அனுப்பியுள்ள அறிக்கையின் சுருக்கமாவது:—

லோகமான்ய பாலகங்காதர திலகர் அவர்களின் மூத்த குமாரனான ஸ்ரீமான் ராமசந்திர பலவந்த திலகர் என்பவர் ஜனவரிமீ 12ம் தேதி முதல் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகிறார். அவ்வுண்ணாவிரதத்தைத் துடங்கும் முன் ஜனவரிமீ 8உயே ஓர் தஸ்தா வேஜியும் ஏற்படுத்தி ரிஜிஸ்தர் செய்திருக்கிறார். அதில் காலம் சென்ற லோகமான்ய திலகரின் சொத்துக்களுக்கு ஷையார்உயிலில் கண்டபடிதான் தான் எக்ஸிக்யூடர் என்னும் ஷைஎக்ஸிக்யூடர் முறமையில் தான் ஒரு பப்ளிக்டிரஸ்ட் ஏற்படுத்தியிருப்பதாகவும் அதற்காக ஷை சொத்துக்கள் செலவிடப்பட வேண்டுமென்றும் விதித்திருக்கிறார்.

மேற்கண்டவாறு செய்யும் முன் அவர் கேஸரி மராட்டாபத்திரிகை ஸ்தாபன டிரஸ்டிகளுக்கு ஓர் நோடீஸ் அனுப்பியுள்ளார். அதில், தான் தான் லோகமான்ய திலகரின் கொலம்பு உயிலை நிறைவேற்ற அர்ஹதையுள்ள எக்ஸிக்யூடர் என்றும் வேறுயாரோ எக்ஸிக்யூடர் என்று சொல்லிக்கொண்டு செய்திருக்கும் வினியோகங்களும் வியவஸ்தைகளும் செல்லுபடி உள்ளவைகள் அல்லவென்றும், கேஸரி பத்திரிகையை இனி மராத்தி பாஷையில் பிரசுரிக்கக்கூடாது, ஹிந்தி மொழியிலேயே பிரசுரிக்க வேண்டுமென்றும், இரண்டு பத்திரிகைகளும் ஸ்ரீமான்களான பி. ஜி. கேர். மௌலானா அபுல் கலாம் ஆஸாத், ஒரு பார்ஸிகனவான் ஆகிய இவர்களின் தலைமையிலே நடத்தப்பட வேண்டுமென்றும், ஷை பத்திரிகைகளுக்காக ஏற்பட்டிருக்கும் டிரஸ்ட் ஆனது இந்திய நாஷனல் காங்கிரஸ்ஸாரிடம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்றும், 16—8—20க்கு பிறகும் நாளது வரையிலும் பிரசுரமாகியிருக்கும் கேஸரி, "மராட்டா" பத்திரிகைகள் யாவும் பிரசுரிக்கப்படாததாகவே கருதப்படவேண்டுமென்றும் இன்னும் சில விபரங்களும் கண்டு, கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் ஷரத்துக்களுக்கு டிரஸ்டிகள் இணங்காததால் ஸ்ரீமான் ஆர். பி. திலகர் உண்ணாவிரதம் துடங்கிவிட்டார்.

தற்கால டிரஸ்டிகளான ஸ்ரீமான்கள் J. S. கரந்திகார் எல். பி. போவத்கார், ஜி. வி. கேத்கார் ஆகிய மூவரும் 16-1-41 ஓர் ஸ்டேட்மெண்ட் பிரசுரம் செய்திருக்கின்றனர். அந்த ஸ்டேட்மெண்டில் ஷை விஷயங்களின் உண்மையை விஸ்தாரமாகக் கூறி, லோகமான்ய திலகரின் உயில் ஸம்பந்தமான ஸந்தர்பங்களையும் உயில் அனுஷ்டானத்துக்கு கொண்டுவரப்பட்ட முழுவிபரங்களையும் ஸ்ரீ ஆர். பி. திலகரின் முன் செயல்களையும் கூறிவிட்டு ஷை ஸ்ரீ ஆர் பி. திலகர் தற்போது ஷைபத்திரிகைகளின்விஷயமாக எவ்விதத்திலும் தலையிட பாத்யமற்றவர் என்றும், அவர் ஏற்றுக்கொண்டிருக்கும் உண்ணாவிரதம் ஷை பத்திரிகை டிரஸ்டிகளை பயமுறுத்தி தங்கள் கடமையைக் கைவிடச் செய்யவே அனுஷ்டிக்கப்படுகிறதென்றும், ஷையார்ஏற்படுத்தும்புதியடிரஸ்டானது செல்லும்படியாகாதென்றும் நியாயவிரோதமென்றும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அவர்கள் ஸ்டேட்மெண்டின் ஸாராம்சமாவது:- ஸ்ரீலோகமான்ய திலகர்கொழும்புவில் உள்ள தன் சொத்துக்களைக் குறித்து 5-4-1918ல் உயில் ஏற்படுத்தினார். அதில் தன் அச்சுக்கூட சம்பந்தமாக ஓர் பப்ளிக் ட்ரஸ்ட் ஏற்படுத்தவேண்டும் என்றும் தன் பத்திரிகை நோக்கம் ஒருபொழுதும் மாற்றி அமைக்கப்படக்கூடாதென்றும் உயிலில் கண்ட ஷரத்துக்களை அனுஷ்டானத்துக் கொண்டுவர ஸ்ரீ தொண்டோ வாஸுதேவ வித்வான்ஸ்ஸருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதென்றும், எக்காரணத்தாலாவது ஷை யார் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவராவிட்டால் மட்டில் ஸ்ரீ R. B. திலகர் அவைகளை அனுஷ்டானத்துக் கொண்டு வரவேண்டியதென்றும் கண்டிருக்கிறது. ஸ்ரீலோகமான்ய திலகர் 1—8—1920ல் காலமானார். பிறகு அவரது நோக்கங்களுக்கும் உயில் ஷரத்துக்களுக்கும் உட்பட்டே ஸ்ரீR. B. திலகரும் அவர் தம்பியும் நடந்துவந்து ஏராளமாக பிரயோஜனமும் அடைந்தனர். "கேஸரி மராட்டா" ஸ்தாபனங்களுக்கு ஸ்ரீ வித்வான்ஸ்ஸையும், ஸ்ரீ கெல்காரையும் டிரஸ்டிகளாக நியமித்தனர் பத்திரிகைகளின் நோக்கம் மாறுபடக்கூடாதென்றும் ஒப்புக்கொண்டே, தங்கள் தகப்பனாருடன் நீண்டகாலமாக உழைத்து வந்துவரும் நம்பிக்கைக்கு பாத்திரமானவரும் மருமகனுமான ஸ்ரீ வித்வான்ஸ்ஸை நியமித்தனர். ஸ்ரீ வித்வான்ஸ்ஸும் இவர்களைக்கேட்டுக்கொண்டும் இவர்கள் ஸம்மதத்தின்பேரிலுமே 16-8-1920ல் இப்பப்ளிக் ட்ரஸ்ட்டையும் ஏற்படுத்தினார்- அந்த தஸ்தவேஜியில் ஸ்ரீR.B. திலகரே முதல் கையெழுத்து செய்துள்ளார். ஸ்ரீ திலகரின் குமாரர்கள் தங்களுக்கு சேஷமாக அதிகாரத்தையும் வைத்துக்கொள்ளவில்லை. ஷை ஸ்ரீ வித்வான் உயிலில்கண்டபடி உயிலை முற்றிலும் எக்ஸிக்யூட் செய்துவிட்டார். பம்பாய் ஹைகோர்டில் ஸ்ரீ ஆர். பி. திலகர் துடர்ந்த தாவாவிலும், மேலே கண்டபடியே, ஸ்ரீ திலகரின் எஸ்டேட் முழுவதும் அட்மினிஸ்டர் ஆகிவிட்டது என்றுதீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. ஷை டிரஸ்டிகளும் கேஸரி,மராட்டா பத்ரிகைகளைவிமர்சையாக நடத்தி லோகமான்யரின்கொள்கைகளுக்கு சிறிதும் மாறுபடாது பிரசாரம் செய்து வந்திருக்கின்றனர். ஸ்ரீ திலகர் ஷை ஸ்ரீ வித்வான்சை டிரஸடியிலிருந்து விலக்க வேண்டுமென்று துடர்ந்த வியாஜ்யமும் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆர். பி. திலகர் டிரஸட் விஷயத்தில் தலையிடக்கூடாதென்றும் கோர்ட்டில்தீர்ப்புக்கூறப்பட்ட்டிருக்கிறது. பிறகு ஸ்ரீமான்கள் கேல்காரும் வித்வான்ஸ்ஸும் வயோதிகமாகிவிட்டபடியால் தற்காலம் டிரஸ்டிகளாக இம்மூவரையும நியமித்துவிட்டு விலகிக்கொண்டார்கள் 1—6—37 முதல் தற்கால டிரஸ்டிகள் திலகர் கொள்கைக்கு சற்றும் பிறழாமல் பத்திரிகைகளை ஏற்று நடத்திவருகின்றனர். ஆகையால் ஸ்ரீமான் ஆர் பி திலகருக்கு டிரஸ்ட் விஷயமாக தலையிட யாதொரு பாத்யமுமில்லை. ஸ்ரீ லோகமான்ய திலகரின் கொள்கைக்கு மாறாகவும் பத்திரிகை நோக்கத்தை நிறுத்தி அமைக்கவும் பலவாறு முயற்சிசெய்தும் பயன்படாததால் தற்போது உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறார். வீண் பிடிவாதம் என்றும் இது அந்யாயம் என்றும் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

ஸ்ரீஜகத்குருசங்கராசார்ய ஸ்வாமிகள்

விஜய யாத்ரை

திருவிசலூர், வேப்பத்தூர், அணக்குடி

நாளது தைமீ 10உ குருவாரம் விடியற்காலம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகளவர்கள் கும்பகோணம் ஸ்ரீ மடத்திலிருந்து புறப்பட்டு சுமார் 4½ மணிக்கு திருவிசலூர் விஜயமானார்கள். கிராம வாஸிகளால் பூர்ண கும்பங்களுடனும் வாத்ய கோஷங்களுடனும் வரவேற்கப்பட்டு, அக்ரஹார மார்க்கமாய் செல்லும் போது மஹாமஹோபாத்யாய வேங்கடசுப்ப சாஸ்திரிகளவர்கள் கிருஹத்திலும் முத்ராதிகாரி ஆயுர்வேத வைத்யர் டி. வி. சுப்பிரமணிய அய்யர் கிருஹத்திலும் சிறிது சிறிது நேரம் வீற்றிருந்து விட்டு ஸ்ரீ தரவேங்கடேச அய்யாவாள் ஸன்னதியில் சுவாமி தரிசனம் செய்தார்கள் 5½ மணிக்கு அவ்வூரை விட்டுப் புறப்பட்டு பாகவதபுர வாஸிகள் வேண்டுகோளுக்கிரங்கி அவ்வூர் அக்ரஹார வழியாய் வேப்பத்தூர் சென்றார்கள்

மகா-ா-ாஸ்ரீ கல்யாணபுரம் நரஸிம்மய்யர் முதலியோர்களால் அவ்வூர் எல்லையில் தேவ மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டு 6 மணிக்கு மகா-ா-ாஸ்ரீ சங்கரநாராயணய்யர் கிருஹத்தில் எழுந்தருளினார்கள். அன்றும் மறுதினமும் அன்னரால் விசேஷமாய் உபசரிக்கப்பட்டு ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரபூஜை பிராம்மண சந்தர்ப்பணம் முதலியவைகளை விசேஷமாய் நடத்தினார்கள் குருவாரம் இரவு ஸ்ரீ காமாக்ஷியம்மன் கோவிலில் முத்ராதிகாரிகள் கடைமையைப் பற்றியும் மற்ற ஜனங்களனைவரும் ஒத்துழைக்க வேண்டிய கிரமத்தைக் குறித்தும் ஓர் அரிய உபன்யாசம் செய்தார்.

12உ சனிக்கிழமை 6 மணிக்குப் புறப்பட்டு அணக்குடி மிராசுதார் அரண்மனை ராமஸ்வாமி பிள்ளையால் அவ்வூர் எல்லையில் விருதுகளுடனும் வாத்ய கோஷத்துடனும் வரவேற்கப்பட்டு அவ்வூர் சிவாலயத்தில் 9 மணிக்கு பிரவேசித்தார் அங்கேசுவாமி தரிசனம் செய்து கொண்டு அன்றும் மறுதினமும் அவ்வாலயத்திலேயே கல்லாண மண்டபத்திலேயே ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜை நடத்தினார்கள்.

13உ ஞாயிற்றுக்கிழமை அவ்வூரை விட்டுப் புறப்பட்டு வேப்பத்தூர், திருவிசலூர் முதலிய கிராம வாஸிகளால ஆங்காங்கு உபசரிக்கப்பட்டு இரவு 7 மணிக்கு கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் எழுந்தருளினார்கள். பிரஸித்த விகட வித்வான் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஓர் கச்சேரி நடத்தினார். ஸ்ரீ குரு பாதாள் அக்கச்சேரியை மிக அன்புடன் கேட்டு சாஸ்திரிகளை பன்முறையும் மெச்சினார்கள், ஸ்ரீ அய்யாவாள் மட விஷயமாய் அன்னார் செய்து வரும் கைங்கர்யத்திற்காக அன்னாரை பலவிதமாய்ப் புகழ்ந்து பல மந்த்ராக்ஷதை முதலியவைகளால் கருணையுடன் அநுக்ரஹித்தார்கள்.

ஸ்ரீ ஜகத்குரு மஹாசன்னிதான ஆக்ஞைப்படி நாளது தைமீ 10உ குருவாரம் ஏகாதசியன்று ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள் சன்னிதியில் அத்வைத சபா பண்டிதர் பிரமஸ்ரீ K. ராமநாத சாஸ்திரிகளவர்களாக ஸ்ரீமத் பாகவதத்திக "கோவர்த்தனோத்தாரணம்" என்ற சரித்ரம் உபந்யஸிக்கப்பட்டது.

வைத்யம் T. V. சுப்ரமண்யய்யர்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ தை-மீ 17௨

ஸன்யாஸத்தின் மேன்மை

மிகப்ப்ரஸித்திபெற்ற தேசாபிமானியான ஸ்ரீ ஸுபாஷ்சந்திரபோஸைப்பற்றிச் சில தினங்களாக வெளிவரும் ஸமாசாரங்கள் நம் தேச ஆஸ்திகர்களின் மனதைக்கலக்க கூடியவைகளாயும், நமது மதத்தின் தனிச் சிறப்பை வெளியிடக் கூடியவைகளாயுமிருக்கின்றன. ஸ்ரீமான் போஸ், தற்காலம் மிகுந்த கபடம் கலந்த இந்திய ராஜீயக் கிளர்ச்சியில் வெறுப்படைந்து, வைராக்யம் கொண்டு, சாந்தமானதும், சாச்வதமானதும், நமது பெரியோர்கள் பலரும் அவலம்பித்ததுமான உத்தம வழியைப் பின்பற்ற நிற்கிறார்போலும். ஸ்ரீமான் போஸ் சில நாட்களாக தனியிடத்தில் தங்கி, புலித்தோல் ஆஸனத்தில் வீற்றிருந்து, ருத்ராக்ஷ மாலை பணிந்து, கீதாபாராயணமும், யோகாப்யாஸமும் செய்து கடைசியாக எங்கேயோ மறைந்திருக்கிறார்.

ஸ்ரீமான் போஸ் இவ்வுலக வாழ்க்கையில் தீவ்ரமாக ஈடுபட்டு வந்தவர். தற்கால உலக நாகரீகத்தின் நிலைமையை நன்கு அறிந்தவர். பெரிய படிப்பாளி. ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறியவர். இந்திய ராஜீயக் கிளர்ச்சியில் முக்கிய ஸ்தானம் வஹித்து, தேசத்தின் தீவிரமான ஆதரவைப்பெற்றவர். இவ்வளவு லௌகிக மேன்மை பெற்ற மனிதனாயிருந்தும் இவர், மனிதவாழ்க்கையில் மற்றெல்லாவற்றையும்விட சாந்தியையும், வைராக்யத்தையும் உயிராகக் கொண்ட ஸன்யாஸமே உயர்ந்ததென நம் முன்னோர் காட்டிய வழியை தைர்யத்துடன் பின்பற்றும் நோக்கமுள்ளவராயிருக்கிறார் என்பது மிக்க விசேஷமானது. நம் தேசம் ஸன்யாஸிகளாலேயே க்ஷேமம் அடையக்கூடியதென்ற நம்பிக்கை பழய காலம்முதலுள்ள உண்மை. மற்ற மதங்களோ, தேசங்களோ மனிதன் இவ்வுலக வாழ்க்கையிலிருந்து மீட்கப்பெற்று, சாந்தியும் வைராக்கியமும் நிறைந்த உயர்ந்ததொரு வாழ்க்கையை மனித சமூகத்திற்குக் காட்ட முன் வரவில்லை. அத்தகைய தனிப் பெருமை நம் தேசமொன்றுக்குத்தான் அமைந்துள்ளது. ஜனத் தலைவர்களாயிருந்து அவர்களுக்கு இஹ-பர ச்ரேயஸ்களை காட்டியுள்ள நம்முன்னோர்கள் பலரும் தன்னலப்பற்றற்ற ஸன்யாஸிகளாகவே விளங்கியிருக்கிறார்கள். கள்ளம் கபடமற்ற நிலைமையில் ஜன ஸமூகத்திற்கு வழி காட்டக் கூடியவர் அவர்களே. 'நானே தெய்வம், என் வார்த்தையே ஸத்தியம் என்று ஜனங்களை நம்பும்படி படாடோபம் செய்து அஸத்ய வழியில் தேசத்தை ஈடுபடச் செய்யும் கார்யம் நம் ஸன்யாஸதர்மத்தில் கிடையாது. அவர்கள் வேதாதி ப்ரமாணங்கள் போதித்த ஸத்யத்தில் ப்ரதிஷ்டை யடைந்தவர்கள். சாந்தர்கள். ஆக்ரஹ மற்றவர்கள்.

இப்போது உலகமெங்கும், துராசையும், க்ரோதமும், வஞ்சனையும் நிரம்பி மனித ஸமூஹம் அழிக்கப்பட்டு வரும் குரூர நாகரீகத்தைப்பார்த்து வருகிறோம். இது உண்மையில் மறைந்து ஜனஸமூஹம் க்ஷேமமடைய வேண்டுமானால், நம்முன்னோர்கள் காட்டியுள்ள ஒவ்வொருபடியையும் கடந்து கடைசியாக சாந்தமானதும், வைராக்யாஸ்பதமானதுமான ஓர் உயர்ந்த நிலைமையை அடைவதற்கு வழி ஒன்று நிச்சயமாக வேண்டியிருக்கிறது. அந்த வழியை நம் பெரியோர்கள்காட்டியபடி கைக்கொள்வதே ஸ்ரீமான் போஸின் போக்காயிருக்கிறது.

இனி நம் தேசத்திற்கு ஏற்ற வழியில் நம் ஜன ஸமூஹ க்ஷேமத்தைக்கருதும் தலைவர் எத்தகையவராயிருக்க வேண்டுமென்பதில் ஸ்ரீ போஸ் வழி காட்டி விட்டார்.

நமது கீதை போதிக்கும் உத்தம தர்மமான ஸன்யாஸம் அல்லது தியாகத்தில் ஈடுபட்ட மஹான்களாலேயே நம் தேசம் க்ஷேமமடைய வேண்டும். அவர்களே நமது ஒப்பற்ற தலைவர்களாவார்கள்.

குறிப்புகள்

பக்ரீத்தில் பிராணிபலி!

மத கார்யங்களுக்காக பிராணிபலி செய்வது அநாகரீகமென்று இந்தியாவிலுள்ள ஒரு சில குதர்க்கவாதிகள் கூச்சல் போடுகிறார்கள். ஆயினும் இந்த 20ம் நூற்றாண்டில்கூட நாகரிகத்தின் உச்சாணியில் நிற்கும் அநேக மதஸ்தர்கள் மத கார்யங்களுக்காக பிராணி பலியிடுவதை ஓர் உயர்ந்த மதமாகவே கருதிச் செய்து வருகிறார்கள்.

இவ்வருஷம் பக்ரீத் பண்டிகை லண்டனில் கொண்டாடப்பட்டதாம். அப்போது நான்கு ஆட்டுக்குட்டிகள் பலியிடப் பட்டனவாம். பிரபல ஆங்கிலேயர் ஒருவர் இந்த நான்கு ஆட்டுக்குட்டிகளைக் கிரயம் கொடுத்து வாங்கி உபயம் செய்ததுடன் பலியிடும் ஸமயத்தில்கூட இருந்தும் நடத்தி வைத்ததாக ராய்ட்டர் ஸமாசாரம் பத்திரிகைகளில் பிரசுரமாயிருக்கிறது. பக்ரீத் பலி நடத்தும் முஸ்லீம்கள் உலகத்தில் நாகரிகம் வாய்ந்தவர்கள். ஐரோப்பாவிலும் மற்ற விடங்களிலும் நாடு ஆளுபவர். தவிர மிகுந்த நாகரிகஸ்தானமாகிய லண்டனில் ஷை பலி நடக்கிறது. அதிலும் நாகரிக ஆசானாக மதிக்கப்படும் ஆங்கிலேயர் அந்த பலிக்காக ஆடுவாங்கி தானம் செய்கிறார். இந்த ஆச்சர்ய ஸம்பவத்தைப் பற்றி இந்தியாவிலுள்ள நமது சீர்திருத்த நாகரீகர்கள் வாய்திறக்கவில்லை. ஹிந்து மதத்தைக் குறைகூறும் பாதிரிகளும் மற்றவர்களும் மௌனம் சாதிக்கிறார்கள். ஏன்? முஸ்லீம்கள் மதபலியை பரிசுத்தமாகவும் குரானின் கட்டளையாகவும் நினைக்கிறார்கள். பிறமதஸ்தர்கள் இதை தூஷிப்பதை ஸஹிக்க மாட்டார்கள். ஒருவருக்காக பயந்து மதக் கட்டளையை விட்டுக் கொடுக்காத உறுதியுள்ளவர்கள். ஆகையால் சீர்திருத்தக்காரர்களின் விரட்டல் அவர்களிடம் பலிக்காது. தகுந்தபடிப்பினையும் கிடைத்துவிடுமல்லவா?

யுத்தத்தில் மனிதவதை செய்வதும் புனித தர்மமாக இந்த 20வது நூற்றாண்டில் எல்லா நாகரீக தேசமும் நினைக்கிறது. மத கார்யத்திற்காக ஹிம்ஸை செய்வதை எல்லாரும் இப்போது ஆதரிக்க முன் வருகிறார்கள். காந்தி ஒருவரைத்தவிர அஹிம்ஸையை ஒப்புகிறவர் இவ்வுலகில் ஒருவருமில்லையென்பது தெளிவாகிறது. ஹிந்து மதம் அஹிம்ஸையை அங்கீகரிக்கவில்லையென்றும் முக்ய கார்யங்களில் ஓரளவு ஹிம்ஸையை அங்கீகரிப்பதாயும் எல்லோரும் வரிந்து கட்டிக்கொண்டு பேசஆரம்பித்து விட்டார்கள். அப்படியானால் ஹிந்துமதத்தில் பிராணிபலி அங்கீகரிக்கப்பட்டிருப்பதை ஏன் தூஷிக்க வேணும்?

ஆலயப்பிரவேசத்தின் விபரீதப்போக்கு.

திருவாங்கூர் ஹிந்து மஹா ஸபையார் ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த இரண்டு வெள்ளைக்கார ஸ்திரீகளைச் சுத்தி செய்து வைத்து ஹிந்து மதத்தில் சேர்த்துவிட்டார்கள். இவ்விரு ஸ்திரீகளும் ஹிந்துக்களானவுடன் பத்மநாபர் தேவாலயத்திற்குள் சென்று ஸ்வாமி தர்சனம் செய்தார்களாம். இதிலிருந்து சீர்திருத்தக்காரர்களுடைய ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியின் விபரீதப் போக்கு நன்கு வெளியாகிறது, ஹிந்து ஸமுதாயத்தில் தீண்டாமை நீக்கப்பட வேணுமென்றும் தீண்டாதார், ஜாதி ஹிந்துக்களுடன் ஸம அந்தஸ்தில் வைக்கப்பட வேணுமென்பதே ஆலயப்பிரவேசத்தின் நோக்கமென்று பன்முறை பறையடிக்கப் பட்டிருக்கிறது. ஹிந்து ஸமுதாயத்தில் தீண்டத்தகாதவர்களாயிருப்பவர்களை உத்தேசித்து ஆரம்பித்த இந்த இயக்கமானது, மிலேச்சர்களைக்கூட நமது கோவில்களில் பிரவேசிக்கச் செய்யும் விபரீதத்திற்கு வந்து விட்டது.

ஆகவே, கோவில்களை ஒரு மியூஸியமாகவே செய்துவிடடார்கள். மிலேச்சர்களை சுத்திசெய்து ஹிந்துஜாதியில் சேர்த்துக் கொள்ள நமது சாஸ்திரங்களில் ஆதாரமிருப்பதாக சீர்திருத்தக்காரர்கள் கூட வாதிக்கமுடியாது. ஹிந்துமதத்தில் இத்தகைய ஜாதிமாற்றவேலைக்குச் சிறிதும் ஆதாரமில்லை. ஏற்கனவேயே ஆகமமுறையிலிருந்து நழுவி நசித்துப்போன பத்மநாபர் கோவில் எப்படிப்போனால் நமக்கென்ன? ஆயினும் ஜாதியானது பிறப்பினால் ஏற்படுகிறதென்ற வைதிகமத ஸித்தாந்தத்தை அழிக்கவே ஆலயபிரவேசக் கிளர்ச்சி ஏற்பட்டதேயல்லது உண்மையாக தீண்டாதார் க்ஷேமத்தைக் கருதியல்லவென்பதற்கு பிரகிருத விஷயமும் ஓர் ருஜுவல்லவா? மேலும் இந்த அக்ரமத்தை ஹிந்துமஹா ஸபையார் செய்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஹிந்து மஹா ஸபையானது ஸமூஹச் சீர்திருத்த விஷயத்திலும், ஹிந்துமதத்திற்கு வியாக்யானம் செய்யும் விஷயத்திலும் முற்றிலும் அவைதிகமான ஆர்யஸமாஜத்தையே பின்பற்றி நிற்கிறதென்பதற்கு வேறு என்ன ருஜு வேண்டும்? மத மாற்றத்திற்கும், ஜாதி மாற்றத்திற்கும் உள்ள வித்யாஸங்களை அறியாமல் இம்மாதிரி விபரீதம் செய்வதானது காலக்ரமத்தில் ஹிந்து ஸமுதாயத்தையே உருத்தெரியாமல் அழித்துவிடுமென்பதில் ஐயமுண்டோ?

வித்யையின் மஹிமை

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடாதிபதி
ஸ்ரீ சங்கராசாரியாளவர்களின் உபதேசம்.

கும்பகோணம் ஸ்ரீ மடத்தில், 22—1—41 புதன்கிழமை இரவு ஸ்ரீ ஆசார்யாள் செய்த பிரஸங்கத்தின்ஸாரமாவது :—

கல்வி எல்லாருக்கும் அவச்யம். அதைக்காட்டிலும் துணை, பந்து, கிடையாது. "கல்வியினாங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணை;" "विद्या–बन्धुः विदेशगमने" என்று கவிகள் சொல்லியிருக்கிறார்கள். வித்யையே உயர்ந்த ஆபரணம். வித்யையின் மஹிமையைப் பற்றி எல்லாரும் புகழ்ந்திருக்கிறார்கள். வித்யையினால் மோக்ஷத்தையும் அடைகிறான் என்று வேதம் கூறுகிறது. तमेवं विद्वान् अमृत इह भवति। பின்னால் ஒரு காலத்தில், வேறு இடத்திற்கு போய் மோக்ஷம் அடைவதாக சொல்லவில்லை. வித்வான் இங்கேயே அம்ருதனாக ஆகிறான் என்று சொல்லியிருக்கிறது.

எல்லாரும் படிக்கவேண்டும் என்று இப்போது சொல்லுகிறார்கள். எந்தெந்த தேசங்களில் எத்தனை பேர் படித்திருக்கிறார்கள், என்று கணக்கிடுகிறார்கள். அமெரிக்காவிலும், வேறு நாடுகளிலும், படிப்பு ரொம்ப பரவியிருக்கிறதாகவும், நமது நாட்டில் படிக்கிற மாணவர்களின் சங்கியை ரொம்ப குறைவு என்றும் சொல்லுகிறார்கள். எப்பாடுபட்டாவது எல்லாரையும் படிக்கும்படி செய்யவேண்டும் என்கிறார்கள். படித்த பேர்கள் ஜாஸ்தியானால் தான், தேசத்துக்கு க்ஷேமம், சௌக்கியம், என்று எல்லாரும் சொல்லுகிறார்கள்.

ஆனாலும், படிப்பு ரொம்ப கெடுதல், ஒருவருமே பள்ளிக்கூடத்துக்கு போகக்கூடாது, என்று சொல்லலாம் போலிருக்கிறது. எல்லாரும் நல்லது என்று நினைக்கும் படிப்பைப்பற்றி இப்படி ஏன் தோன்றவேண்டும்? இந்தமாதிரி ஆக்ஷேபம் தோன்றவே கூடாது என்று சொல்வது சரியல்ல. சந்தேஹம் வருவதற்கு காரணம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். தீர விசாரித்த பின்பு தான் முடிவுக்கு வரவேண்டும். அப்படிப்பட்ட முடிவு தான் கெட்டியாக இருக்கும். உபாத்யாயர் பாடம் சொல்லும்போது, பையன் சந்தேஹமே கேட்காவிட்டால், பாடம் புரிந்ததும் சந்தேஹம் தான். சந்தேஹம் கேட்டு, பிறகு தெரிந்து கொள்வது, நன்றாக தெரிந்துகொண்டதாகிறது. அந்த மாதிரி இந்த விஷயத்தையும் விசாரிப்போம்.

படிப்பினால் என்ன கெடுதல்? ஒரு விஷயம் பார்ப்போம். எங்கே படித்தவர்கள் ஜாஸ்தியோ அங்கே கோர்ட்டுகள் ஜாஸ்தியாக இருக்கின்றன. வங்காள மாகாணத்தில் படித்தவர்கள் அதிகம். இப்போது நமது சோழ தேசத்தில் படித்திருக்கிற பேர்கள் அதிகம். படித்தவர்களின் நிலைமை எப்படி இருக்கிறது? அவர்கள் சௌக்கியப்பட்டிருக்கிறார்களா? படித்தவர்கள் அதிகமாய் இருக்கும் இடத்தில் கோர்ட்டுகள் அதிகம் என்று சொன்னோம். அதாவது அங்கே வழக்கு விவகாரங்கள் அதிகம். அதாவது அங்கே தப்புகள், அக்ரமங்கள், அதிகம் நடக்கின்றன. அதாவது, அங்கே பாபம் ஜாஸ்தி. அதாவது, அங்கே துக்கம் ஜாஸ்தி.

70, 80, வருஷகாலமாக ப்ராம்மணர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் பள்ளிக்கூடம், காலேஜ்களில் சேர்ந்து வாசித்தார்கள். இப்போது அவர்கள் எப்படி இருக்கிறார்கள்? உத்யோகம் கிடைக்கும் என்று வாசித்தார்கள். எல்லாருக்கும் கொடுக்க உத்யோகங்கள் இல்லை. லாட்டரி சீட்டு விழுகிறது மாதிரி மூவ்வாயிரம் பேரில் ஒருவருக்கு 1000, 2000 ரூபாய் சம்பளம் கிடைத்தது. அப்படி ஒருவருக்கு பெரிய லாபம் கிடைப்பதற்கு, ஆயிரம் பேர்கள் தோற்று துன்பப்படுகிறார்கள். அக்ரஹாரங்களில் இப்போது ப்ராம்மண கிரஹங்களெல்லாம் பாழாகி வருவதை பார்க்கிறோம் அங்கங்கே ஒரு ப்ராம்மணரைப்பார்த்து, உமக்கு பூர்வீக வீடு வாசல் எங்கே என்று கேட்டால், மூன்று தலைமுறையாக வாடகை வீட்டில் இருக்கிறோம், என்று பதில் சொல்லுகிறார். ஊரில் இருந்த பங்கையும் விற்று, வீட்டையும் விற்று, எல்லாவற்றையும் மாற்றி கையில் ஒரு சர்டிபிகேட் இருக்கிறது. அதைக்காட்டி ஊர் ஊராய் வேலைக்கு திரியவேண்டியிருக்கிறது. நூறு குழி நிலமாவது, ஒரு குச்சு வீடாவது, தம்முடையது என்று இல்லாத நிலைமைக்கு வெகு பேர்கள் வந்து விட்டார்கள். எங்குபார்த்தாலும் தாரித்ரியத்தைத்தான் இந்த படிப்பு உண்டு பண்ணியிருக்கிறது. ப்ராம்மணர்களைப்போல வெள்ளாழர்களும் அதே மாதிரி வீடு வாசலை விற்று படித்தார்கள். அவர்களும் கிட்டத்தட்ட இதே ஸ்திதிக்கு வந்து விட்டார்கள். இப்போது பஞ்சமர்கள் எல்லாரும் படிக்க வேண்டும் என்று மிகப்பாடுபடுகிறார்கள். அவர்களில் ஸ்கூல்பைனல் தேறினவனுக்கு கூட பெரியதாய் போலிஸ் இன்ஸ்பெக்டர், சூப்ரின்டெண்டண்டு உத்யோகம் கிடைக்கக்கூடும். அப்படி ஒருவனுக்கு உத்யோகம் கிடைப்பதால் சேரிகளில் வசிக்கும் மற்றவர்களுக்கு என்ன க்ஷேமம்? வாசித்து விட்டு வந்த பஞ்சமனுக்கு உழவும் தெரியாது. வேறு எந்த வேலைக்கும் அவன் தகுதி இல்லை. பரம்பரை தொழிலும் போய், புது பிழைப்பும் இல்லாமல் திண்டாடுகிறான். இப்படிப்பட்டவர்களுக்கு பசிதீர வகை இல்லாவிட்டால் ஊருக்கே துன்பம் தான். எங்கே திருடலாம், பறிக்கலாம் என்று ஆரம்பிப்பார்கள். ப்ராம்மணன் வேலை கிடைக்காவிட்டால், அதிர்ஷ்டமில்லை என்று உட்கார்ந்திருப்பான். அல்லது அபிச்ரவணம் வாங்குவான். இல்லாவிட்டால் காபிகிளப் வைப்பான். யாரோடும் எதிர்த்து சண்டை கலகம் பண்ண மாட்டான். மற்ற ஏழை ஜனங்கள் அந்த மாதிரி இருக்க மாட்டார்கள். ஓர் ஊரில் ஆயிரம் பி. ஏக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்றால் பயப்பட வேண்டாம். மில் கூலிக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள் என்றால், உடனே போலீஸ்காரர் சுறுசுறுப்பாய் இருக்கவேண்டும். பசி வந்து விட்டால் அவர்கள் இன்னதுதான் செய்வார்கள் என்று சொல்ல முடியாது. கொள்ளை நடக்குமோ, கலகம் நடக்குமோ என்று பயப்படவேண்டும்.

எல்லாருடைய பிழைப்பையும் கெடுத்து தாரித்திரியத்தை விருத்தி பண்ணுகிற படிப்பு நல்லதா, அல்லது கெட்டதா? இந்த படிப்பால் கீர்த்திதான் உண்டா? இந்த படிப்பில் ரொம்ப ஈடுபட்ட ப்ராம்மணர்களுக்கு அளவுக்கு மிஞ்சி கிடைப்பது வசவும் அவமானமுந்தான். தமது பூர்வீக தொழிலை விட்ட ப்ராம்மணர்களை மற்ற எல்லா வகுப்பாரும் திட்டுகிறார்கள். அவர்களிடத்தில் எல்லாரும் ஆகாமையும், த்வேஷமும் பாராட்டுகிறார்கள். ஆகையால், இந்த படிப்பினால் உண்டாகும் பலன்கள் பாபம், துக்கம், தாரித்ரியம், அவமானம், என்று ஏற்படுகிறது. சண்டை சச்சரவுகள் எல்லாம் தாரித்ரியத்தினால் உண்டாகின்றன. இவ்வளவு கக்ஷிகளுக்கும், கலஹங்களுக்கும் காரணம் சாப்பாட்டுக்கு இல்லாத கஷ்டம்தான். குடும்பத்திற்குள்ளே கூட, இல்லாமையால்தான் கோபதாபங்கள் வருகின்றன. ஓர் கவி, தன் பத்னியுடனும் தாயாருடனும் ஒரு ராஜாவிடம் போனான். அவனிடம் தானம் கேட்பதற்கு பதிலாக ஓர் ச்லோகம் சொன்னான். அதன் அர்த்தம் "என் குடும்பத்தில் என் தாயார், நான், என் பத்தினி மூன்று பேர்கள்; என் அம்மாள் அடிக்கடி கோபித்துக் கொள்கிறாள். ஆனால், அது என்னாலும் அல்ல, என் பத்னியாலும் அல்ல, என் பத்னியும் கோபித்துக்கொள்ளுகிறாள்; என்னாலும் அல்ல. என் தாயாராலும் அல்ல. நானும் கோபித்துக்கொள்ளுகிறேன்; அது அவளாலும் அல்ல, தாயாராலும் அல்ல. ராஜாவே! சொல்லுங்கள். இப்படி எந்த குற்றத்தினால் ஏற்பட்டிருக்கிறது!" தாரித்திரியம் தான் இதற்கு காரணம் என்று ராஜா தெரிந்து கொண்டு, கவிக்கு சம்மானம் செய்து அனுப்பினான். ப்ராம்மணர்களுக்கு வேலை கிடைக்காமல் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் பண்ணிவிட்டதாக சொல்லுகிறார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி கிளம்பியிரா விட்டாலும், பிரம்மணர்களுக்கு வேலை கிடைத்துக்கொண்டேயிருந்திருக்காது. ஒரு ஆயிரம் வேலைகளுக்கு மூவ்வாயிரம் பேர்கள் படித்து உத்யோகம் விரும்பினால், எப்படி சமாளிக்க முடியும்? படித்த ப்ராம்மணர்களுக்கெல்லாம் வேலை கிடைத்துக்கொண்டே இருக்கும் என்று எதிர்பார்க்கமுடியுமா? ப்ராம்மணர்கள் படித்து வீணாய்ப்போகிறதற்கு, பழியை ஜஸ்டிஸ் கக்ஷி பேரில் சுமத்துவது சரியில்லை. மற்றவர்கள் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் இருந்தால் அதிகமாய் துக்கப்படமாட்டார்கள். வேறு ஏதாவது தொழிலை செய்யவாவது சாமர்த்யமுண்டு. பி. ஏ. தேறின ப்ராம்மணன் வேலை கிடைக்காவிட்டால் காய்ந்து கன்னிப் போகிறான். புத்தி அதிகம் என்றால், துக்கமும் அதிகம்தான். இந்த படிப்பினால் மற்றவர்களைக் காட்டிலும் பிராமணர்கள்தான் தீவ்ரமாக துன்பங்களை அநுபவிக்கிறார்கள். குலம் கெட்டு, ஆசாரம் கெட்டு, வீடு வாசலையும் விட்டு பலபேருடைய விரோதமும், வசவும் கிடைப்பதுதான் ப்ராம்மணர்களுக்கு இந்தப்படிப்பினால் உண்டான பலன்.

(தொடரும்.)

தீண்டாமையின் உண்மை

திவான்பகதூர் கே. எஸ் ராமஸ்வாமி சாஸ்திரிகள் எழுதுகிறார்:—

தீண்டாமையைப்பற்றி ஹிந்துக்கள் கோபதாபமின்றி ஆராய்ச்சி செய்வது மிகவும் நல்ல விஷயமே. விஷயத்தை நினைத்து வக்தாவை மறந்து ஆராய்ச்சி செய்தலே நலம்.

युक्तियुक्तं वचो ग्राह्यं बालादपि शुकादपि ।

'சித்ரபானு' கேட்கிறார் 'மனு ஹிந்துக்கள் என்றுநம்மைக் குறிப்பிட்டிருக்கிறாரா? அல்லது ஸநாதனிகள் என்று தான் சொன்னாரா?" மனு நம்மை ஹிந்துக்கள் என்றும் குறிப்பிடவில்லை, ஸநாதனிகள் என்றும் குறிப்பிடவில்லை. ஆர்யாவர்த்தம் என்பதற்கு பொருள் எழுதும்போது குல்லுக பட்டர் கூறுகிறார்.

अर्या अत्रावर्तन्ते पुनः पुनरुद्भवन्तीत्यार्यावर्तः ॥

விந்திய பர்வதத்திற்கு தெற்கே உள்ள இடம் தக்ஷிணதேசம். முழு தேசத்திற்கு பரதம் என்று பெயர். மொத்தமாக நமக்கு நாம் வைத்த பெயர் பரதர் அல்லது ஆர்யர். பாரசீகவாசிகள் நம்மை ஹிந்துக்கள் என்றுரைத்ததால் அப்பெயர் ஒட்டிக்கொண்டது. ஸநாதனி என்ற பதம் வட இந்தியாவில் நம்மவர்களை சீக்கியர்களிடமிருந்து பிரித்துக் குறிக்க ஏற்பட்ட பெயர்.

நான் ஹிந்து மகாசபையில் பதவியை அடைவதற்காக ஒன்றை சொல்லத் துணியப்பட்டவன் என்று சிவராமகணபதி சாஸ்திரிகள் நினைப்பது சரியல்ல. அனேக பதவிகளைப் பார்த்திருக்கிறேன். அத்தகைய மோகம் எனக்கு கிடையாது. என். ஆர். அய்யர் அவர்கள் என்னை மற்றவர்கள் வெகுதூரம் இழுத்துக்கொண்டுபோய் விடுவார்களோ என்றுபயப்பட வேண்டாம். என் மனத்தின் வன்மையை மறவாமலிருக்கும்படி நான் அவரை மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மாவின் பெருந்தன்மையையும் சாந்தசுபாவத்தையும் நான் பாராட்டுகிறேன். நான் என்னுடைய வரவேற்பு சங்கத்தலைவர் சொற்பொழிவில் சொன்ன விஷயத்தை இவ்விடத்திலே குறிக்கின்றேன்

As regards temple entry the Congress method of forcible temple entry by the whims of trustees protected by *expost facto* legislative indeminity is unwise."

"We must never forget that social reform must come from within and as a result of the urge of godliness and righteousness and not as an imposition from above by a mere majority vote."

"Many a powerful attack was launched in the past by rebels from within and invaders from without on our social and economic and political order and yet it is alive and powerful. Let us do nothing to pull it down".

ஸ்ரீமான் ஸவர்க்காரும் தீண்டாமையைப்பற்றிய தீர்மானத்தை பிரேரேபித்தபொழுது கட்டாய சட்டங்களை உபயோகிப்பது தவறு என்று சொன்னார். அது தினப்பத்திரிகைகளில் விவரமாக பிரசுரிக்கப்படவில்லை.

ஹிந்துமஹா ஸபையும் ஸநாதன தர்மமும்

(என். ஸாம்பசிவய்யர் பி. ஏ. பி. எல்)

ஹிந்து மஹா ஸபையானது ஸநாதன தர்ம ஸபைக்கு ஒத்துவருமோ வென்ற சந்தேகம் சிலருக்கு இருப்பதாகத் தெரிகிறது. ஹிந்துமஹா சபையின் கூட்டமானது மதுரையில் நடப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டதை முன்னிட்டு ராவ்சாகிப் ஸ்ரீமான் நடேசய்யரவர்கள் ஒத்துழைக்கும் விஷயமாக ஹிந்துமஹா சபைக்குக்கடிதம் எழுதினார். ஆர்யதர்மம் பத்திராதிபரும் ஸ்ரீமான் சவர்க்காரவர்களுடைய அக்ராசனமொழிகளில் கவனிக்க வேண்டிய அம்சங்கள் ரொம்ப இருப்பதாக புகழ்ந்திருக்கிறார். பக்கபலமாகயிருந்தவர்கள் நம்மை கைவிட்டு விட்டார்களேயென்ற வருத்தத்தின் மிகுதியினால் மஹா சபையில் இருந்து கொண்டே ஸநாதன தர்மத்திற்கு பாடுபட வேண்டுமென்று ஸ்ரீமான்கள் திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்களையும், திருப்புகழ் மணி T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களையும் ஆர்யதர்மம் பத்திரிகையின் மூலமாக வேண்டிக் கொள்ளுகிறார்கள். இவ்விதமெல்லாம் கோருபவர்கள் ஹிந்து மஹா சபையில் நல்ல அம்சங்கள் சிலதாவது இருப்பதாக எண்ணி இவ்விதம் சொல்லுகிறார்களா அல்லது மேலே கண்ட ஸ்ரீமான்கள் முதலியவர்களுடைய புத்தி சக்தியும் உத்சாகத்தின் மிகுதியும் உழைப்பின் மேன்மையும் நமக்கு இல்லாமல் போகிறதுடன் இடையூராகக்கூட நேரும் போலிருக்கிறதே யென்ற தாபத்தினால் சொல்லுகிறார்களோ தெரியவில்லை.

மஹாத்மாகாந்திகூட ஹிந்து பரம்பரையானது சாத்வீகமான வழியிலேயே பழக்கப்படுத்தப் பட்டிருப்பதால் சாத்வீகமான எதிர்ப்பு மாத்திரம் ஹிந்துக்களுக்கு உரித்தானதென்ற தத்வத்தை கண்டுபிடித்து பிரகடனம் செய்திருக்கிறார். ஒருக்கால் சைன்யங்களில் சேர்ந்து யுத்தங்களுக்கு தயார் செய்துகொள்ளவேண்டியது அவசியமென்று வைத்துக் கொண்டாலும் அது க்ஷத்திரிய வர்ணத்தாருக்குக் மாத்திரம் உரித்தானதே தவிற எல்லா வர்ணங்களையும் ஒன்று சேர்த்து சண்டாளர்களையும்கூட சேர்த்து எல்லோரும் சண்டைக்குத் தயார் செய்து கொள்ளவேண்டுமென்று ஹிந்து மஹா சபையார் சொல்லுவது போல் சொல்லுவதானது நம்முடைய வர்ணாச்ரமதர்மத்தை ஒழிப்பதற்கான வழியேயாகும்.

தற்காலம் வர்ணத்தாரைப் பிரிக்க முடியாதென்று சிலர் சொல்லுவது அவ்வளவு சரியாகத் தோற்றவில்லை. சில வர்ணத்தார்கள் இதர வர்ணத்தாருடைய தொழில்களை அவலம்பித்திருக்கிறார்கள் என்று மாத்திரம் சொல்லலாமே தவிர வர்ணங்கள் பிரிபட முடியாத ஸ்திதிக்கு வந்துவிட்டதாக சொல்ல முடியாது. ஒன்று ஒரே தீர்மானமாக இனி நம்முடைய சமூகத்தின் நன்மையை உத்தேசித்து வர்ணாச்ரமதர்மங்களை அறவே ஒழிக்கவேண்டுமென்றுவது சொல்லவேண்டும். அல்லது சீர்குலைந்திருக்கும் வர்ணாச்ரமதர்மங்களை சீர்திருத்தம்செய்யவாவது பாடுபட வேண்டும். வர்ணாச்ரம தர்மத்தைஒப்புக்கொண்டு அந்த தர்மத்திற்கு விரோதமாக ஏற்படக் கூடிய கார்யங்களை செய்யவேண்டுமென்று சொல்லுவதில் என்ன தாத்பர்யம் என்பதுதான் விளங்கவில்லை.

அன்றியும் சில கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்ட சபையில் முக்யமான ஸ்தானத்தை வகித்து சில விஷயங்களில் தன்னுடைய சொந்த அபிப்பிராயம் இவ்விதமென்று சொல்வதிலும் அர்த்தம் புரியவில்லை. தன்னுடைய வீட்டிற்குள் கர்மயோகத்திலோ பக்தியோகத்திலோ அவரவர்கள் ஈடுபடுவதானது அவரவர்களுடைய ஆத்மலாபத்தைக் குறித்த விஷயமாகும். சமூக சம்பந்தமாக பொதுவில் அவரவர்கள் பாடுபடுவது எந்தெந்த சபையிலிருந்து வேலை செய்கிறார்களோ அந்த சபையைப் பொருத்ததாகும். சாதாரணமாக சட்ட புஸ்தகங்களில் இன்ன வார்த்தைக்கு இன்ன பொருளென்று தீர்மானமாகச் சொல்லலாம் ஆனால் ஸநாதனி, ஸநாதன தர்மம் என்ற வார்த்தைகளுக்கு இன்னதுதான் பொருளென்று தற்காலம் தீர்மானித்துச் சொல்ல முடியவில்லை. ஸநாதன தர்மத்திற்கு விரோதமான அம்சங்களை சமூகத்தில் பிரசாரம் செய்து கொண்டு நான் ஸநாதனி யென்று ஒருவர் சொன்னால் அதை ஆக்ஷேபிக்க யாருக்குத்தான் பாத்யமிருக்கிறது. வர்ணாச்ரம தர்மத்தை அறவே ஒழிக்க கங்கணபத்தர்களாக இருக்கும் காங்கிரஸ் மஹா சபையின் அத்யக்ஷர்கள் கூட தாங்களே ஸநாதனிகள் என்று உத்கோஷிக்கிறார்கள். அதை யார் மறுத்து என்ன செய்ய முடியும்.

ஆகையால் முதல்முதலாக ஸநாதன தர்ம மஹாசபையைச்சேர்ந்த சிலருக்காவது அவரவர்கள் நடந்துகொள்ளவேண்டிய வரம்புகள் எது வரையில் என்பதும் இன்ன இன்ன அம்சங்களை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் மாத்திரம் ஸநாதனி யென்ற நாமதேயத்திற்கு உரித்தானவர்களென்பதும் தீர்மானிக்கப்பட வேண்டும் அதற்கு விரோதமான பிரசாரங்கள் செய்பவர்கள் அனுஷ்டானங்களில் எவ்வளவு சிறந்தவர்களாக இருந்தாலும் ஸமூகத்தில் அவர்களை ஸநாதனியாக ஒப்புக்கொள்ள முடியாது. இன்னும் இது சம்பந்தமான இதர அம்சங்களை இன்னொரு சஞ்சிகையில் கவனிப்போம்.

நூல் விமர்சம்:— கோடகநல்லூர் ஸுந்தர ஸ்வாமிகள் சரிதம். ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதர் பெண் வமசத்தில் தோன்றி பல ஆலயங்களுக்கு கும்பாபிஷேகம் செய்வித்து பலரை நல்லவழியில் திருப்ப வேதாந்த நூல்களை இயற்றி பல முறை ஸப்தஸம்ஹிதை பஞ்சாஹம் நடத்திய இவ்வுததமரின் சரிதம் அவர் வம்சத்தவரால் இப்போது தான் தமிழில் வெளியிடப் பட்டிருக்கிறது. அவர்தம் சிஷ்யர்களுக்கும் ஆஸ்திகர்களுக்கும் இந்த சரிதம் படிக்கப் பேரின்பம் தரும். சில எழுத்தாளர்கள் கடினபதங்களை ரொம்ப ஸாதாரணமானவர் படிக்க முடியாதபடி செய்வர். இதில் சில அரியகடின பதங்கள் காணப்படுகின்றன. தனது சுய சரிதத்தை எழுதிவரும். டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் மிக சுருக்கமான ஓர் முகவுரை எழுதிஉளார் ஸ்ரீ பரமஹம்ஸ ஹிருஷீகேசம் ஆநந்தகுடீரம் தைவ நெறிக்கழக தலைவர் ஸ்ரீ ஸ்வாமி சிவாநந்தர் மிக அருமையான முகவுரை ரஸமாக எழும்யிருக்கிறார்.

வே. ஸோ.

ஸ்ரீ பிரஹ்மவித்யா விமர்சனீ ஸபை பிரசுரங்கள்.

ஸ்ரீ நகர விமர்சமும் ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னமும்	0—12—0
ஸ்ரீ குரு தத்வ விமர்சம்	0—5—0
ஸ்ரீ வரிவஸ்யா ரஹஸ்யம்	1—0—0
ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி	2—0—0
ஸ்ரீ வித்யா ஸபர்யா வாஸனை	3—0—0
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய தத்வம்	1—8—0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக் கூடம் லிமிடெட், கும்பகோணம்.

வான்மீகரும் தமிழும்

(மதுரை, பண்டிட் நாரயண அய்யங்கார் எழுதியது)

(1—9—41 தொடர்ச்சி)

'மதுரம் வாக்யம்' என்பன போன்ற ஆஞ்ஜனேயருடைய வசனங்கள் தமிழ் பாஷையை குறிக்கின்ற தென்றும் மதுரம்' என்ற பதம் அதன் பர்யாயமான தமிழைக் குறிப்பதாகவும் நினைப்பது அநுசிதம். மதுரம் என்பதற்குப் பர்யாயமாகத் தமிழ் என்ற சொல் ஆகுமேயாகில் அப்பொழுது மதுரமான கரும்பு, மதுரமான பால், என்பன போல தமிழான கரும்பு, தமிழான பால், என்ற பிரயோகமும் ஸம்பாவிதமாகும். அவ்விதம் யாரும் பிரயோகித்தாகக் காணமுடியாது. தமிழ் என்ற பதத்திற்கு முன் 'இன்' என்ற விசேஷணத்தைச் சேர்த்து இன் தமிழ் என்றே பல கவிகளின் பிரயோகம் காணப்படுவதால் அவைகளில் இன் என்ற விசேஷணமும் வியர்த்தமாகும். மறுக்க முடியாத ருசுக்களால் ஓர் விஷயத்தை நிருபிப்பதே ஆராய்ச்சியாகும். ஒரு ருசுவுமில்லாமல் ஆஞ்ஜனேயர் ஸீதையிடம் பேசிய பாஷை தமிழ் என்று முடித்து விடுவது ஸாஹஸமே.

மேலும் ராமாயணகாலத்தில் பாண்டியநாடே இருந்ததில்லையென பல ருசுக்களால் காணுகின்றோம். ராமன் ஏராளமான சைந்நியத்துடன் லங்கையை நோக்கிப் படையெடுத்தாகக் கம்பரும் வால்மீகியும் கூறுகின்றனர். அவர்கள் தெலுங்கு நாட்டிலுள்ள கிஷ்கிந்தா பட்டணத்திலிருந்து லங்கையை நோக்கிச் சென்று தென் சமுத்திரக்கரையில் தங்கி சில நாள் கழித்து ஸமுத்திரத்தில் அணை கட்டினர் என்பது சரித்திரம். அந்த தென் சமுத்திரம் பாண்டிய ராஜனைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். பாண்டிய ராஜனுடைய சம்மதமின்றி அவன் நாட்டில் வேறு அரசரும் அவர் சைந்யமும் வந்திருப்பது அஸாத்யம். அவ்வரசர் சம்மதமின்றி தகவலின்றி இக்காரியம் ரகஸியமாகவும் நடந்திருக்க முடியாது. உண்மையில் தமிழ் நாட்டில் ஓர் அரசன் இருந்திருந்தால் ராமனுக்கு ஒத்தாசையாவது செய்திருக்க வேண்டும். அல்லது தன் எல்லையில் விடாமல் தடுத்தாவது இருக்கவேண்டும். இவ்விரண்டில் ஒன்றும் நடைபெற்றதாக சரித்திரம் கூறவில்லை. மேலும் கரன், தூஷணன், திரிசிரஸ், என்ற மூன்று ராக்ஷஸஸேநாபதிகளுடன் 14 ஆயிரம் ராக்ஷஸ சைந்யம் தமிழ் நாட்டில் ராவணனால் வைக்கப்பட்டிருந்ததாக கம்பரும் வால்மீகியும் கூறுகின்றனர். அம்மூவர் இருந்தவிடம் தற்காலம் நிச்சயிக்கப்படாவிட்டாலும் கரன் ஊர் கரூரென்றும், திரிசிரஸ் இருந்த ஊர் திரிசிரப்புரம் என்ற திருச்சினுப்பள்ளியென்றும், தூஷணன் ஊர் தாராபுரம் என்றும், நினைக்க ஹேது இருக்கின்றது. அது எப்படியாயினும் தமிழ் நாட்டில் தான் அம்மூவரும் இருந்து வந்தாகத் தெரிகின்றது.

ஆகவே இப்பெரும் ராக்ஷஸ சைந்யத்திற்கு நடுவில் தமிழ்நாடு ஜீவித்திருக்கமுடியாது. தமிழ் நாட்டரசர்கள் ஓர் ராக்ஷஸனைக்கண்டதாகவாவது அல்லது சண்டையிட்டதாகவாவது தமிழிலோ ஸம்ஸ்கிருதத்திலோ காணப்படவில்லை. அரக்கர்களுடைய தொந்திரவைப்பற்றி அகஸ்தியர் முதலானோர் பாண்டிய ராஜனிடம் முறையிட்டதாகவும் தெரியவில்லை. ராவணன் திக்விஜயத்தின் பொழுது தமிழ்நாட்டரசர்களிடம் சண்டையிட்டதாகவும் கூறப்படவில்லை. ராமாயண காலத்தில் தமிழ்நாடு தண்டகாரண்யமென்ற பெயருடன் ஓர் பெரும் அரண்யமாக விருந்ததாகவே புலப்படுகின்றது. பாண்டியர் சேரர், சோழர், என்ற மூவேந்தர்கள் பிற்காலத்தில் தமிழ் நாட்டை பாகித்து ஆண்டார்களேயன்றி ராமாயண காலத்திலும் அதற்கு முந்தியும் பிந்தியும் இம்மூவேந்தர்கள் இருந்திருந்ததாக ருசு கிடையாது.

அக்காலங்களில் 'திரமிட தேசம்' என்று ஓர் பிரதேசமாக இருந்துவந்தது. தத்காலம் சிலோன் என்று அழைக்கப்படும் தீவுக்கு ஸிம்மலத்வீபம் என ஸம்ஸ்கிருதத்தில் பெயர். அத்தீவினரை ஸிங்களவர் என தத்காலம் அழைப்பதற்குக் காரணம் அத்தீவின் பெயரையொட்டியே. தெற்கே வெகு தொலையில் லங்கை என்ற தீவு இருந்ததாகத் தெரிகின்றது. பஞ்ச ஸித்தாந்திகை, ஆர்யபடீயம், முதலிய சோதிட நூல்களில் "லங்கா ஸம பச்சிமம்" என்று லங்கையை நிரக்ஷரேகையெனக் கூறப்பட்டுள்ளது. நிரக்ஷரேகை என்பதை ஆங்கிலத்தில் (equtor) என்கின்றனர். பூகோள படத்தைப் பார்த்நால் சிலோனுக்குத் தெற்கில் வெகுதூரத்தில் நிரக்ஷரேகை ஓடுவதைக் காணலாம். ஆகவே பாம்பன்முதல் நிரக்ஷரேகையளவுள்ள தூரம் நூறுயோஜனையென்றும் நூறுயோஜனைதூரமுள்ள அணை கட்டப்பட்டதாகவும் தெரிகிறது. அந்த அணையில் ராமேசுவரம் அமைந்திருப்பதாக புராணம் கூறுகின்றது. ஆகவே குமரியைத் தென் எல்லையாகக்கொண்ட தமிழ்நாடு ராக்ஷஸ வாஸமாக இருந்ததேயன்றி சாதாரண மனிதர் வாஸஸ்தலமாகவிருந்தாகச் சொல்ல வழியில்லை.

தென் திசையில் ஸீதையைத்தேடப் புறப்பட்ட ஆஞ்ஜனேயர் முதலியோர் காடுகளில் தேடினதாகத் தெரிகிறதேயன்றி ஒரு நாட்டில் கூட தேடினதாகத் தெரியவில்லை. பாண்டிய நாட்டைப்பற்றிச் சொல்லும் சில ராமாயண வசனங்கள் சமீபத்தில் சிலரால் புகுத்தப்பட்டவை. தவிர தமிழே மனித பாஷையாக இருந்திருக்குமாகில் மனிதரான வால்மீகி ஓர் அன்னிய பாஷையில் ராமாயணத்தைத் தொகுத்தது காரணமின்றியொழியும். ஆஸேது ஹிமாலயம் தமிழே மனித பாஷையாகவிருந்திருந்தால் மனிதர்களுக்கு அவசியம் வேண்டிய கணக்கு, ஜோதிடம், வைத்தியம், ஸங்கீதம், சில்பம், ராஜநீதி, ஹிந்து சட்டம், நீதிமுறை, தனுர்வித்யை முதலியன தமிழிலேயே யமைந்திருப்பது உசிதமாகும். வருஷங்களுக்குப் பெயர்கூட தமிழில் காணப்படவில்லை. இவையனைத்தும் ஸம்ஸ்கிருதத்தில் அமைந்திருப்பதும் அவைகளே நாளைக்கும் வழக்கத்திலிருப்பதும் மனித பாஷை ஸம்ஸ்கிருதம்தான் என்பதை ஊர்ஜிதம் செய்கின்றன.

தமிழ்நாட்டில் ஆதிகாலம் முதல் அரசர்களும் ஜனங்களும் ஸம்ஸ்கிருதத்தையே பேசிவந்தார்கள் என்பதற்கு வேறு பல பிரமாணங்கள் காணப்படுகின்றன. ஸ்ரீ பாகவதம் எட்டாம் ஸ்கந்தத்தில் அடியில்கண்ட வசனங்கள் காணப்படுகின்றன.—ச்ராத்தாதேவ இதி க்யாத: மனுத்வே ஹரிணார்பித: | ஏகதா கிருத மாலாயாம் குர்வதோ ஜலதர்பணம் | தஸ்யாஞ்ஜல்யுதகே காசித் சபர்யேகாப்யபத்யத | ஸத்யவ்ரதோஞ்ஜலிகதாம் ஸஹ தோயேந பாரத | உத்ஸஸர்ஜ நதீ தோயே சபரீம் த்ரவிடேச்வர: | ஸதயவ்ரதன் என்ற தபஸ்வி இக்கல்பத்தில் ச்ராத்ததேவன் என்ற பெயருடன் மனுவாக ஆனன். தமிழ்நாட்டரசனாகிய ச்ரத்தாதேவன் கிருதமாலை (வைகை)யில் ஜலதர்பணம் செய்யும் பொழுது அவன் கைகளில் நீருடன் ஓர் மீன் தோன்றிற்று.

அதை அந்த நதீ ஜலத்தில் விட்டான் என்பது மூல வசனங்களின் பொருள். இந்த வசனங்களால் த்ரமிட நாடு தான் இருந்ததென்பதும் (பாண்டிய நாடு முதலிய பெயர்கள் பிறகாலத்தியவை என்பது வியக்தம்) நதிக்கு கிருதமாலை என்றும் தமிழ் நாட்டரசனுக்கு ச்ரத்தாதேவன் என்றும் இவையனைத்தும் ஸம்ஸ்கிருதப் பெயர்களாலே காணப்படுகின்றன. தவிர தமிழ் நாட்டில் நடந்த மத்ஸ்யாவதார வைபவத்தைப்பற்றி தமிழ் பாஷையில் ஒரு குறிப்பும் காணப்படவில்லையாகையால் தமிழ் நாட்டில் தமிழ் பாஷை வெகு காலத்திற்குப் பிறகேவந்ததாக ஒப்புக்கொள்ள வேண்டியிருப்பதால் வால்மீகி தமிழன் அல்ல என்று நிரூபிதமாகிறது.

சட்டக் குறிப்புகள்.

(2ம் பக்கம் தொடர்ச்சி)

1க்கு 5 வீதம் வட்டிபோட்டு அதற்குமேல் கொடுத்திருக்கும் உபரி வட்டித் தொகைகளை அசலில் உளவடைத்துக் கொள்ளும்படி கடன்காரர் கேட்க பாத்தியமில்லை.

ஆனல் 1-10-32 தேதிக்கு பிறகு ஏற்பட்ட கடன்கள் விஷயமாக மற்றொரு அம்சம் கவனிக்கத்தக்கது. மேலேகண்ட உதாஹரணத்தில் கடன் தஸ்தவேஜியின் தேதியாகிய 1-1-1933 முதல் ஒரு வருஷதிற்கு மாத்திரம் தஸ்தவேஜிப்படிக்குள்ள வட்டி ரூ 120 மாத்திரம் கொடுத்து வட்டிக்கென்றே வரவு வைத்திருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். பிந்திய வட்டி கொடுக்காமல் தாவாசெய்தால் Aக்கு ஷை 1-1-33 முதல் 22-3-38 தேதி வரையில் வருஷம் 1க்கு 100க்கு 5 வீதம் வட்டி கணக்கிட்டு அதில் ஏற்கனவே வரவுவந்த தொகை ரூ 120 போக பாக்கி வட்டி ரூ 144—4—0 யும் 22—3—38 முதல் டிக்ரி வரையில் 100க்கு வருஷம் 1க்கு 6¼ வீதமும் டிக்ரிக்குப்பிறகு 6 வீதமும் கிடைக்கும். அதாவது 100க்கு 5 வீதமுள்ள வட்டியானது வரவு வந்த வட்டிக்குமேல் இருக்கும் பக்ஷத்தில் அந்த உபரி வட்டி Aக்கு கிடைக்கும். ஷை 100 5 வீதமுள்ள வட்டியானது வரவு வந்த வட்டிக்கு குறைவாக இருக்கும் பக்ஷத்தில் அதின் உபரி பாகத்தை கடன்காரன் திருப்பிக்கேட்கவாவது உளவடைக்கவாவது பாத்தியமில்லை.

இந்த அம்சத்தில் 1—10—32 தேதிக்கு முந்திய கடன் விஷயமாக வித்யாசம் இருக்கிறது. அதில் அதிக வட்டி கொடுத்திருந்தால் கடன்காரன் திருப்பிக்கேட்கக் கூடாது. குறைவாக வாங்கியிருந்தால் கடன் கொடுத்தவன் 1—10—37 வரையில் உபரி வட்டி கேட்கக்கூடாது.

(தொடரும்)

சந்தா குறைக்கப்பட்டிருக்கிறது.

வருஷத்திற்கு ரூ. 2—4—0 தான்.

ஆஸ்திகர்களின் நன்மையை உத்தேசித்து 1941 வருடத்திற்கு ஆர்யதர்மம் சந்தாவை ரூ. 2—4—0 ஆக செய்திருக்கிறோம்.

ஆங்காங்குள்ள தமிழ் எழுதப் படிக்கத்தெரிந்த யாவரும் சந்தாதார்களாகச் சேர்ந்து பத்திரிகையை ஆதரிக்க வேண்டுகிறோம்.

மானேஜர்.

பார்வதி=கல்யாணம்

எஸ். கே. விச்வேச்வர சாஸ்திரிகள், மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர்

(9—1—41 தொடர்ச்சி.)

சுந்தரய்யர் லட்சுமியைக்கூப்பிட்டு, பையன் ஆகாரம் உட்கொண்டவுடன் அவனை பற்றிய ரகஸ்யத்தை அவனிடம் சொல்லப் போகிறேன். நீயும் அதே சமயத்தில், உன் அறைக்குள், பார்வதியைப் பற்றின ரகஸ்யத்தை அவளிடம் சொல்லிவிடு என்று திட்டம் செய்தார். கிணற்றண்டை அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சுந்தரய்யரை நமஸ்கரித்து கல்யாணம் சிற்றுண்டியை சாப்பிட்டான். உடனே சுந்தரய்யர் அவன் கையைப்பிடித்து ஆசையோடு ஒரு தரம் கட்டியணைத்து, எதிரே உட்கார வைத்து, அப்பா கல்யாணம்! இதுவரையில் ரகஸ்யமாய் உன்னிடம் சொல்லாமல் வைத்திருந்த சங்கதியை இப்போது உனக்குத் தெரிவிக்கிறேன். நீ படிப்பில் முன்னேற்றம் அடைந்ததற்கெல்லாம் காரணம், என் பிராண சினேகிதர் சங்கர சாஸ்திரிகளே: அவருக்கு வெகுவாய் நான் கடமைப்பட்டவனாய் விட்டேன்: என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் அவருக்கு? நீ உண்மையில் என் பிள்ளை: ஒரு காரணமாய் உன்னை அங்கே வளரவிட்டிருந்தேன். என் ஆஸ்தியெல்லாம் உன்னுடையதே, உன்னைப் பாதுகாத்த என் சினேகிதரிடம், நீ இன்னும் பிரியமாயிருக்க எனக்கு ஒரு ஆட்சேபணையும் இல்லை. நீ தாயில்லாப்பிள்ளையல்ல: லட்சுமி தான் உன் தாய். அவள் இப்போது அடுத்த அறையில் பார்வதிக்கு அவள் சங்கர சாஸ்திரி பெண் என்ற ரகஸ்ய விஷயங்களை யெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறுள் என்று சொல்லி முடித்தார். கல்யாணம் இவைகளை வெகு ஆச்சர்யத்துடன் கேட்டான்.

லட்சுமி பார்வதியைக் கூப்பிட்டு குழந்தாய்! நான் சொல்லும் வார்த்தைகளைக் கேட்க உனக்கு ஆச்சரியம் உண்டாகும். நீ பிறந்த 15ம் நாளில் உன் தாய் என் தோழி ஸரஸ்வதி காலமானுள்: அதற்கு முன்னுல் நான் ஒரு சமயம் பார்க்கப்போயிருந்த போது ஏதாவது விசேஷமானுல் என் குழந்தையைப் பார்த்துக்கோ என்று கெஞ்சிக்கேட்டாள்.

நான் அவளுக்கு தைரியம் சொல்லி வந்தேன்: அவள் தான் சொன்னபடியே, இறந்தாள். நீயும் அவள் கேட்டுக்கொண்டபடியே இங்கே வளர்ந்தாய்: என் பிள்ளை கல்யாணத்தை வளர்க்கிற சங்கர சாஸ்திரிகள் தான், உன் தகப்பனுர்: ஆசைக்கு ஒரு பெண் என்னிடம் வளரவேண்டுமென்று பகவான் கட்டளையிட்டிருந்தாரோ என்னவோ. நீ தாயற்றவள் என்று இனி வருந்தவேண்டாம்: நான் எப்போதும் போல் உன்னிடம் பிரியமாய் இருப்பேன் என்றுள். பார்வதிக்கு, தன் அந்தஸ்து மாறுமே என்று சற்று ஏக்கம் உண்டாயிற்று. சுந்தரய்யர், கல்யாணத்தினிடம் ரகஸ்யங்களை வெளிப்படுத்தினவுடன், அவனுக்குண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. சுந்தரய்யர், லட்சுமியைக்கூப்பிட்டு, பார்வதியோடு இங்கே வா என்றுர். நால்வரும் சேர்ந்து ஸந்தோஷிப்பதற்கு முன்னுல், உடனே வரும்படி சங்கர சாஸ்திரிகளுக்கும் ஆள் விட்டார். ஒன்றும் தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்த அவரும், உடனே வந்தார்.

லட்சுமியும் பார்வதியும் சற்று தூரத்தில் நிற்கவா, சங்கரா, என்று சொல்லிக்கொண்டே ஆண் மூவரும், உட்கார்ந்தார்கள். என்ன சங்கரா! குட் எல்லாம் வெளியாய் விட்டன. இப்போ உனக்கு ஆனந்தந்தானே? உனக்கு எப்படியோ அப்படியே எனக்கும் என்றுர் சங்கரர். (தொடரும்)

வெளியூர்ச் செய்திகள்

வளவனுரில் தைமீ 10உ ஆனுங்கூர் ஸ்ரீ வெங்கடரரம சாஸ்திரிகளால் ஸ்ரீசங்கர விஜயம் உபந்நியஸிக்கப் பட்டது.

* * *

திருவல்லிக்கேணியில் தமிழ்ச் சங்க ஆதரவில் ஸ்ரீ ப. ரெ. திருமலை அய்யங்காரால் நடத்தப்பட்டு வந்த திருப்பாவை பிரஸங்கம் 13—1—41 ல் முடிவு பெற்றது. அட்வகேட் ஸ்ரீ ஆர். கேசவ அய்யங்கார் தலைமை வகித்தார். ஸ்ரீஅஹோபில மடம் ஸ்வாமிகளால் "தமிழ் வித்வான்" என்ற பிருதம் உபந்நியாஸகருக்கு அளிக்கப் பட்டது.

* * *

பாலக்காடு தாலுக்கா கிராமங்களில் அம்மனுர் ஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகள், விவாஹம், தேவதோபாஸ்தி, வைதீகதர்மம் முதலிய பல ஸனுதந தர்ம விஷயங்களைப் பற்றி உபந்நியஸித்தார். பிரபல வக்கீல்களும் மிராசுதார்களும் பொது ஜனங்களும் மிகுந்த ஒத்துழைப்புக் காட்டி நடத்திவைத்தார்கள்.

* * *

கோனேரிராஜபுரம் தைமீ 8உ வேதமூர்த்தி ஸ்ரீ ராமசந்திர ச்ரௌதிகள் புத்ரன் அப்த பூர்த்தி லவபவத்தை முன்னிட்டு திருவிசநல்லூர் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளால் ஸநாதந தர்ம உபந்நியாஸமும் ஓர் விகடக் கச்சேரியும் நடந்தது.

* * *

வைகை நல்லூரில் (குளித்தலை) அக்கிரஹாரத்தில் ஸ்ரீ பாலசுப்ரமண்ய சாஸ்திரிகளால் பிரவசனம் செய்யப்பட்டு வந்த ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் கணையாழி கட்டம் வெகு ரஸமாக உபந்நியஸிக்கப் பட்டது.

* * *

குன்னக்குடியில் தியாகப் பிரம்மத்தின் உத்ஸவம் ஸ்ரீ கணபதி சுப்ரமண்ய தீக்ஷிதர் ஆதரவில் விமர்சையாக கொண்டாடப் பட்டது ஸ்ரீஎன். சுப்பிரமண்ய சாஸ்திரிகளால் ஸ்ரீதியரக பிரம்மத்தின் சரித்திரம் உபந்நியஸிக்கப்பட்டது. ஸங்கீத கச்சேரிகளும், ஊர்வலமும் சிறப்பாக நடந்தன.

* * *

நாகப்பட்டிணம் ஹிந்து மதாபிமான சங்கத்தின் ஆதரவில் கும்பகோணம் ஸ்ரீ டி. என். ரெகுநாத பாகவதர் அவர்களால் சென்ற 16—1—41 புதன்கிழமை முதல் பிரதிதினம் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உபன்யசிக்கப்பட்டு 24—1—41 வெள்ளி கிழமை ஸ்ரீ ராமசந்திர பட்டாபிஷேகத்துடன் பூர்த்தி அடைந்தது.

சங்கத்தின் காரியதரிசி என். சாம்பசிவ அய்யரால் வந்தனேபசாரங்கள் கூறப்பட்டு பாகவதர் அவர்களுக்கு சம்மானங்கள் செய்யப்பட்டு பூர்த்தி அடைந்தது.

கோனேரிராஜபுரம் வர்ணுச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் பொதுக்கூட்டம்

19-1-41 ஞாயிற்றுக்கிழமை ஷை ஸங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ வரதராஜஸ்வாமி கோவிலில் ஓர் பொதுக்கூட்டம் நடந்தது. ஸங்கத்தலைவர் ஸ்ரீமான் ராதாகிருஷ்ணய்யர் அக்ராஸனம் வஹித்தார். கதாரத்னம் பிரம்மஸ்ரீ தேவராஜ பாகவதர் அவர்கள் "வர்ணுச்ரம ஸ்வராஜ்ய ஸங்கமும் நமது கடமையும்" என்பதைப்பற்றி ஓர் அரிய உபந்நியாஸம் செய்தார்.

தஞ்சை ஜில்லா போர்டார் ஸமபங்க்தி போஜன விஷயமாயும், ஸாஹித்யசிரோமணி வகுப்பை எடுக்கும் விஷயமாயும், செய்த தீர்மானத்தைக் கண்டித்து ஸ்ரீ தேவராஜ பாகவதர் பிரேரேபிக்க ஸ்ரீவெங்டராமய்யர் ஆமோதிக்க ஓர் தீர்மானம் நிறைவேறியது கும்பகோணம் ராஜாபாடசாலையில் ஸாஹித்ய வகுப்பை எடுக்கும் விஷயமும் கண்டிக்கப்பட்டது. வியாகரணசிரோமணி ஸ்ரீ ராமகிருஷ்ணன் ஆமோதித்தார்.

20—1—41 திங்கள்கிழமை முடிகொண்டான் பிரம்மஸ்ரீ எம். ராமய்யரவர்களின் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஸ்ரீ ஏ. ரங்கஸாமி அய்யங்கார் "தீண்டாமையும் அதற்கு சாஸ்திர ஆதாரமும்" என்ற விஷயமாக சாஸ்திர மேற்கொள்களுடன் பேசினுர் ஸ்ரீ தேவராஜ பாகவதர் மதுரை ஆலயபிரவேச அக்கிரமத்தைப்பற்றி உபந்நியஸித்தார்.

22உ முதல் கொடுமுடி ஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள், ஆயுரபிவிருத்தி, ஸந்த்யாவந்தனம் முதலிய பற்பல தர்மங்களைப்பற்றி இனிது பிரஸங்கித்தார். ந-நி

தார்மீக யுவர்சங்கம். ஓர் வேண்டுகோள்

(தோண்டன்)

எச்சரிக்கையும் இனிது நிறைவேற்ற ஆற்றல் படைத்தவர்கள் இளைஞர்கள். விசேஷ மனேபலமும், உடல்வலியும், திடச்சித்தமும் அவர்களுக்கு உண்டு. நுண்ணறிவு மிக்கபெரியோர் அவர்களுடைய சக்தியை உருவான வழியில் செலுத்த ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரவேண்டும். வேதநெறிக்குப் புறம்பான வழிகள் விரும்பத்தக்கதல்ல.

தேவஸேவை யின்றி தேசஸேவை வசமாகாது. இரண்டையும் நோக்காகக் கொண்டது அகில இந்திய வர்ணுச்ரம சுயராஜ்ய சங்கம் ஒன்று தான். அதன் வேலை திட்டங்களை நிறைவேற்ற வேண்டுவது தார்மீக யுவர் சங்கத்தின் கடமை. ராமேஸ்வரம், மதுரை, செட்டிநாடு முதலான இடங்களில் யுவர்சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊரிலும் சங்கங்கள் அமைக்க வேண்டுவது இன்றியமையாதது.

யுவர் சங்கங்களின் திட்டங்களை வகுக்கவும் வருங்காலத்தில் தீவிரமாக வேலை செய்யவேண்டியும், நமது நாட்டிலுள்ள தார்மீக இளைஞர்களை ஓர் மஹா நாட்டில் ஒருங்கே கூட்டி ஆவனசெய்ய முற்படவேண்டுமென்பது பலரது விருப்பம் எனத் தெரிகிறது. இம்மஹா நாட்டை சிறந்த முறையில் நடத்தவேண்டி யிருக்குமாதலால் அது மிக்க பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். பிப்பிரவரி மாதக்கடையிலாவது மார்ச்சு மாதமத்தியிலாவது மஹா நாட்டை நடத்தலாம். ஆர்வம்மிக்க அன்பர்கள் இதில் கவனத்தைச் செலுத்தி தங்கள் சிறந்த யோசனையையும் ஆதரவையும் 'ஆர்ய தர்ம' வாயிலாக வெளியிட வேண்டுகிறேன்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,